பக்கங்கள் – 12
விலை – ரூபா 50

Registered as a Newspaper

# உதயன்

சுடர் : 40
கதிர் : 37

வியாழக்கிழமை
02 ஜனவரி 2025

மார்கழி 18 ஆம் நாள்
வள்ளுவர் ஆண்டு 2055

## 'ஈ-மூரபிக்' செயலி அறிமுகம்

கொழும்பு, ஜன.2
போக்குவரத்து விதிமீறல்கள், குற்றச்செயல்கள் மற்றும் சுற்றுச்சூழல் பாதிப்பு 11

## பொருளாதார நெருக்கடிகளை தீர்க்கும் பயணம் புத்தாண்டில்!

அனைவரின் ஒத்துழைப்பையும் கோருகின்றார் ஜனாதிபதி அநுரகுமார திஸாநாயக்க



கொழும்பு, ஜனவரி 2

நாட்டின் பொருளாதாரக் கட்டமைப்பில் ஏற்பட்டுள்ள பிரச்சினைகளுக்குத் தீர்வுகாணத் தேவையான பொருளாதார நிகழ்ச்சி நிரலை இந்தப் புத்தாண்டில் நடைமுறைப்படுத்தத் தயாராக இருக்கின்றோம் என்று தெரிவித்துள்ளார் ஜனாதிபதி அநுரகுமார திஸாநாயக்க. 11

## 'தூய இலங்கை' வேலைத்திட்டம் ஆரம்பம்

கொழும்பு, ஜன.2
'தூய இலங்கை' (க்ளீன் ஸ்ரீலங்கா) தேசிய வேலைத்திட்டம் ஜனாதிபதி அநுரகுமார திஸாநாயக்கவால் நேற்று உத்தியோகபூர்வமாக ஆரம்பிக்கப்பட்டது.
புதிய வருடத்தின் முதல்நாளான நேற்று, ஜனாதிபதி செயலகத்தில் நடைபெற்ற 'தூய இலங்கை' வேலைத்திட்டத்தின் ஆரம்ப நிகழ்வுக்கு நிகராக அனைத்து அரச நிறுவனங்களிலும் உத்தியோகபூர்வ ஆரம்ப நிகழ்வுகள் நடைபெற்றன. நிகழ்வில் 'தூய இலங்கையை' உருவாக்குவதற்கான உறுதியுரையை அனைத்து அரச உத்தியோகத்தர்களும் எடுத்துக்கொண்டனர். 11

## பஸ் கட்டணங்கள் ஜூலை உயரலாம்

அபாயச்சங்கு ஊதும் கெமுனு விஜயரத்ன

கொழும்பு, ஜன.2
எரிபொருள் விலைத்திருத்தம் தொடர்பான அரசாங்கத்தின் தீர்மானங்களால் பஸ் கட்டணத்தைக் குறைப்பது கனவாக மாறியுள்ளது.
எதிர்வரும் ஜூலை மாதத்தின் பின்னர் பஸ் கட்டணங்களை உயர்த்தவேண்டி ஏற்படும் என்று லங்கா தனியார் பஸ் உரிமையாளர் சங்கத்தின் தலைவர் கெமுனு விஜயரத்ன தெரிவித்துள்ளார். 11

## பல்கலை மாணவர் விபத்தில் மரணம்!

யாழ்ப்பாணம், ஜன.2
விபத்தில் சிக்கிச் சிகிச்சை பெற்றுவந்த வவுனியாவைச் சேர்ந்த 23 வயதுடைய, பல்கலைக்கழக மாணவர் ஒருவர் நேற்றுமுன்தினம் உயிரிழந்துள்ளார். 10

## அநுர அரசாங்கத்தின் மீது மக்கள் நம்பிக்கையீனம்!

கண்டுபிடித்தது பெரமுன

கொழும்பு, ஜன.2
ஜனாதிபதி அநுரகுமார திஸாநாயக்க தலைமையிலான அரசாங்கம் மக்கள் நம்பிக்கையை இழந்து வருகின்றது என்று ஸ்ரீலங்கா பொதுஜன பெரமுனக் கட்சி 09

## நாமல் குமார நேற்று கைது!

கொழும்பு, ஜன.2
சமூகச் செயற்பட்டாளர் என்று கூறப்படும் நாமல் குமார என்பவர் கொழும்பு குற்றத்தடுப்புப் பிரிவினரால் நேற்றுக் கைதுசெய்யப்பட்டநிலையில், அவரை எதிர்வரும் 15ஆம் திகதி வரை விளக்கமறியலில் வைக்க கொழும்பு கோட்டை நீதிமன்றம் உத்தரவிட்டுள்ளது.
கொழும்பு 11

'அரகலய' போராட்ட காலத்தில்

## அரசாங்கத்தை ஒருபோதும் காட்டிக்கொடுக்கவில்லை

சவேந்திரசில்வா தெரிவிப்பு



கொழும்பு, ஜன.2
அதிகாரவெறி கொண்டவர்கள் கூறுவது போன்று நான் அரசைக் காட்டிக்கொடுக்க முற்படவில்லை. ஒரு அந்நிய நாட்டுக்கு சிப்பாயாக அல்லது வெளிநாட்டுத் தூதரகத்தில் கைப்பொம்மையாக இருக்கவேண்டும் என்ற தாழ்வு மனப்பான்மை எனக்கு இல்லை எனத் தெரிவித்துள்ளார் முன்னாள் இராணுவத் தளபதி ஜெனரல் சவேந்திரசில்வா.
முன்னாள் இராணுவத்தளபதியும், முன்னாள் பாதுகாப்புப் 11

## உறக்கத்துக்கு சென்ற பெண் சடலமாக மீட்பு

யாழ்ப்பாணம், ஜன.2
யாழ்ப்பாணம் அரியாலைப் பகுதியில் உறக்கத்துக்குச் சென்ற பெண் சடலமாக மீட்கப்பட்டுள்ளார். இந்தச் சம்பவம் நேற்று நடந்துள்ளது.
அதே இடத்தைச்சேர்ந்த பிரபாகரன் சுரேகா (வயது -40) என்ற பெண்ணே 10

## அடுத்தவாரம் மழை பெய்யலாம்

யாழ்ப்பாணம், ஜன.2
வங்காள விரிகுடாவில் எதிர்வரும் 6 ஆம் திகதி உருவாகவுள்ள தாழமுக்கம் காரணமாக எதிர்வரும் 7ஆம் திகதிமுதல் 16ஆம் திகதிவரை வடக்கில் மழையுடன் கூடிய காலநிலை நிலவலாம் என்று எதிர்வுகூறப்பட்டுள்ளது. 09



'முள்ளிவாய்க்காலில செய்த வினை உந்தாளை சும்மா விடாதுதானே'



## காணிகளை அபகரிக்கிறது தொல்லியல் திணைக்களம்

குச்சவெளியில் மக்கள் எதிர்ப்புப் போராட்டம்

திருகோணமலை, ஜன.2
தொல்லியல் திணைக்களத்தால் காணிகள் கையகப்படுத்தப்படும் நடவடிக்கைக்கு எதிர்ப்புத் தெரிவித்துத் திருகோணமலை, குச்சவெளிப் பிரதேச செயலகத்துக்கு முன்பாக நேற்று மக்கள் போராட்டத்தில் ஈடுபட்டனர்.
திருகோணமலை, குச்சவெளிப் பிரதேசத் 11



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

யானை – ரெலிபோன்

## இணைப்பதற்கான இறுதிப் பேச்சுகள்

கொழும்பு, ஜன. 2
ஐக்கிய மக்கள் சக்தி மற்றும் ஐக்கிய தேசியக் கட்சியை ஒன்றிணைப்பதற்குரிய பேச்சு அடுத்த வாரம் ஆரம்பமாகவுள்ளது என்று அரசியல் வட்டாரங்களில் இருந்து அறியமுடிகின்றது.
இரு தரப்பினரையும் இணைப்பதற்கு இதற்கு முன்னர் முன்னெடுக்கப்பட்ட பேச்சுகள் தோல்வியடைந்த நிலையில், இதுவே கடைசி முயற்சியாக முன்னெடுக்கப்படவுள்ளன.
பேச்சு வெற்றியளிக்கும் பட்சத்தில் உள்ளூராட்சிசபைத் தேர்தலில் கூட்டாகக் களமிறங்குவதற்கும், அவ்வாறு இல்லையேல் தனிவழி செல்வதற்கும் இரு தரப்புகளும் அவதானம் செலுத்தியுள்ளன. (ச-44)

# புதிய அரசமைப்பை உருவாக்கின் அநுர வரலாற்றில் தடம் பதிப்பார்!

*நீதியான சமுதாயத்துக்கான தேசிய இயக்கம் சுட்டிக்காட்டு*

**கொழும்பு, ஜன. 2**
**புதிய அரசியலமைப்பு உருவாக்கத்துக்கு சிறந்த அரிய சந்தர்ப்பம் அரசாங்கத்துக்கு கிடைத்துள்ளது.புதிய யாப்பினை உருவாக்கும் பொறுப்பை ஜனாதிபதி அநுரகுமார நிறைவேற்றினால் வரலாற்றில் அவர் பொன் எழுத்துகளால் பதியப்படுவார் என நீதியான சமுதாயத்துக்கான தேசிய இயக்கம் தெரிவித்துள்ளது.**

இதுதொடர்பில் வெளியிடப்பட்ட அவ்வறிக்கையில்,
புதிய அரசமைப்பு உருவாக்கத்துக்காக முன்னாள் ஜனாதிபதி சந்திரிகா பண்டாரநாயக்க முன்னெடுத்த நடவடிக்கைகளுக்கு அப்போதைய எதிர்க்கட்சி தடையாக செயற்பட்டு மிகப்பெரும் தவறிழைத்தமை இன்றும் கவலைக்குரியது.
ஜனாதிபதி அநுரகுமார திஸாநாயக்க இந்த நாட்டின் நிறைவேற்றுத்துறை அதிகாரமிக்க இறுதி ஜனாதிபதி என்று ஜனாதிபதியை பிரதிநிதித்துவப்படுத்தும் கட்சியினர் குறிப்பிடுவதை அவதானிக்க முடிகிறது.
ஆகவே புதிய அரசியலமைப்பு ஒன்றை உருவாக்குவதில் தடையேதும் தற்போது கிடையாது. புதிய அரசமைப்புக்கு எதிர்க்கட்சியிலும் பெரும்பாலான உறுப்பினர்கள் ஆதரவளிப்பார்கள். அதற்கமைய இந்த நாட்டுக்கு மிக மோசமான அழிவு ஏற்படுவதற்கு காரணமாக அமைந்த நிறைவேற்று அதிகாரமிக்க ஜனாதிபதி முறைமையை இரத்துச் செய்வதற்கு இந்த அரசாங்கத்துக்கு அரியவாய்ப்பு கிடைத்துள்ளது. உரிய காலத்துக்குள் புதிய அரசமைப்பை உருவாக்க வேண்டும் என்பது எமது அபிலாசையாகும் - என்றுள்ளது. (ச-இ)



இயந்திரப் பழுது

## புறப்பட்ட இடத்துக்கே வந்த நெடுந்தீவுப் படகு

யாழ்ப்பாணம், ஜன. 2
நெடுந்தீவிலிருந்து நேற்றுக் காலை குறிகாட்டுவான் நோக்கிப் பயணித்த பயணிகள் படகு மீளவும் நெடுந்தீவிலேயே கரையொதுங்கியுள்ளது.
நெடுந்தீவு இறங்குதுறையில் இருந்து 11 மணியளவில் குறிகாட்டுவான் நோக்கி குறித்த பயணிகள் படகு சேவை ஆரம்பமாகியது. படகு குறிகாட்டுவான் நோக்கி பயணமான 15 நிமிடத்தில் இயந்திரம் செயலிழந்த நிலையில் காற்று மற்றும் அலையின் நிமித்தம் குறித்த படகு நெடுந்தீவு கொம்பனித்துறையில் பயணிகளுடன் கரையொதுங்கியுள்ளது. நெடுந்தீவு மீனவர்கள் மற்றும் கடற்படையினர் அதிலிருந்து பயணிகளை மீட்டனர். (ச-125)

## இனப்பிரச்சினைக்குத் தீர்வு நாட்டுக்கு அதுவே சுபீட்சம்

*செல்வம் எம்.பி. தெரிவிப்பு*

முல்லைத்தீவு, ஜன. 2
நாட்டில் ஏற்பட்டுள்ள இனப்பிரச்சினை தீர்க்கப்பட்டு பயங்கரவாத தடைச்சட்டம் முற்றாக ஒழிக்கப்பட்டால் அநுர அரசு பொருளாதார ரீதியில் அச்சப்பட வேண்டிய அவசியம் ஏற்படாது.
இதனை ஜனாதிபதி கருத்திற்கொள்ளவேண்டும் என்று நாடாளுமன்ற உறுப்பினர் செல்வம் அடைக்கலநாதன் தெரிவித்துள்ளார்.
மன்னாரிலுள்ள அலுவலகத்தில் நேற்று புதன்கிழமை இடம்பெற்ற ஊடக சந்திப்பில் அவர் இவ்வாறு தெரிவித்தார்.
அவர் மேலும் தெரிவிக்கையில்,
புலம்பெயர்ந்துள்ள எம் உறவுகள், எம் நாட்டை உயர்த்துவதற்கான வாய்ப்புகள் உள்ளது.
எனவே நாட்டில் ஏற்பட்டுள்ள இனப்பிரச்சினை தீர்க்கப்பட்டு பயங்கரவாத தடைச்சட்டம் முற்றாக ஒழிக்கப்படல் வேண்டும்.
மேலும் 13 ஆவது திருத்தச் சட்டம், இந்திய - இலங்கை ஒப்பந்தம் இவை அனைத்தையும் நடைமுறைப்படுத்தக் கூடிய வகையில், செயற்பாடுகள் அமைய வேண்டும் - என்றார். (ச-56)

## மொட்டுக்கட்சி மீண்டெழும்

*மஹிந்த நம்பிக்கை*

கொழும்பு, ஜன. 2
ஸ்ரீலங்கா பொதுஜன பெரமுன கட்சி படுதோல்வியடைந்து விட்டது. அதற்கு இனி எதிர்காலம் இல்லை என்று எவரும் கனவு காணக்கூடாது. எமது கட்சி விரைவில் மீண்டெழும் என்று முன்னாள் ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ச தெரிவித்துள்ளார்.
அவர் மேலும் கூறுகையில்,
மொட்டுக் கட்சியை எவராலும் சிதைக்க முடியாது. அது மீண்டெழும். எதிர்வரும் தேர்தல்களில் எமது கட்சி பலத்தைக் காட்டும்.
பொய் வாக்குறுதிகளை வழங்கி ஆட்சிக்கு வந்தவர்களுக்கு எதிர்வரும் தேர்தல்களில் மக்கள் தக்க பாடம் புகட்டுவார்கள்- என்றார். (ச-இ)

## இந்திய மீனவர்களுக்கு விளக்கமறியல் நீடிப்பு



யாழ்ப்பாணம், ஜன.2
எல்லை தாண்டி வடமராட்சி கடற்பரப்பில் மீன்பிடியில் ஈடுபட்ட காரைக்கால் மீனவர்கள் 12 பேருக்கும், கடற்படையினரின் கடமையின் போது இடையூறு விளைவித்த குற்றச்சாட்டில் மேலும் விளக்கமறியலை நீடித்து பருத்தித்துறை நீதிமன்றம் உத்தரவு பிறப்பித்துள்ளது.
எல்லைதாண்டி மீன்பிடியில் ஈடுபட்ட குற்றச்சாட்டில் நீரியல்வளத் திணைக்களத்தினரால் தொடரப்பட்ட வழக்கில் கடந்த நவம்பர் 27ம் திகதி 12 இந்திய மீனவர்களும் நிபந்தனையுடன் விடுதலை செய்யப்பட்டனர். எனினும் கடற்படையினரைத் தாக்கியமை தொடர்பில் பருத்தித்துறை பொலிஸாரால் தொடரப்பட்ட வழக்கில் மீனவர்கள் தொடர்ந்தும் விளக்கமறியலில் வைக்கப்பட்டிருந்தனர்.
குறித்த வழக்கு நேற்று பருத்தித்துறை நீதிமன்றில் மீண்டும் எடுத்துக்கொள்ளப்பட்டபோது எதிர்வரும் 8ஆம் திகதி வரை விளக்கமறியலில் வைக்குமாறு உத்தரவிடப்பட்டுள்ளது. அத்துடன் அன்றையநாள் சட்டமா அதிபரின் ஆலோசனைக்கு அமைய பருத்தித்துறை பொலிஸாரால் குற்றப் பத்திரம் தாக்கல் செய்யப்படவுள்ளது. (ச-100)

*ரயில் திணைக்களத்தின்*

## வெற்றிடங்களை நிரப்பத் தீர்மானம்

ரயில் திணைக்கள ஊழியர்களின் வெற்றிடங்களை நிரப்புவதற்கு ஓய்வு பெற்ற ஊழியர்களை மீண்டும் பணிக்கமர்த்துவதற்கு ரயில் திணைக்களம் தீர்மானித்துள்ளது.
ரயில் திணைக்களத்தில் தற்போது 500 ஊழியர்களுக்கு வெற்றிடம் காணப்படுகிறது. 150 இயந்திர சாரதிகள், 120 பாதுகாப்பு உத்தியோகத்தர்கள்,100 புகையிரத நிலைய அதிபர்களுக்கான வெற்றிடங்கள் காணப்படுகின்றன.
இந்த வெற்றிடங்களை நிரப்புவதற்கு ஆள்சேர்ப்பு நடைபெற்று வருகிறது. இவர்களுக்கு பயிற்சி வழங்குவதற்கு மூன்று வருடங்கள் தேவை. இதன் காரணமாகவே ஓய்வு பெற்ற ஊழியர்களை மீண்டும் பணிக்கமர்த்துவதற்குத் தீர்மானிக்கப்பட்டுள்ளது என்று ரயில் திணைக்கள பிரதிப் பொது முகாமையாளர் இண்டி[illegible] தெரிவித்துள்ளார். (எ-6)

## கம்மன்பில குத்துக்கரணம்

கிளிநொச்சி, ஜன. 2
அரசமைப்பின் 13 ஆவது திருத்தச்சட்டத்துக்கு எதிராக தொடர்ச்சியாக போர்க்கொடி தூக்கிவரும் முன்னாள் அமைச்சர் உதய கம்மன்பில, அடுத்த மாகாண சபைத் தேர்தலில் தான் களமிறங்கவுள்ளதாக அறிவித்துள்ளார்.
எனது அரசியல் எதிர்காலத்தை மக்கள் தீர்மானிப்பார்கள். அடுத்த தேர்தல்களில் எமது கட்சி போட்டியிடும். நான் மாகாணசபைத் தேர்தலில் களமிறங்குவேன்.
என்னை சிறையில் அடைக்க முற்பட்டால் கூட, நாடாளுமன்ற உறுப்பினராக அல்லாவிட்டாலும் நாட்டுக்காக அரசியல் பயணம் தொடரும் எனவும் கம்மன்பில குறிப்பிட்டுள்ளார். (ச-44)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# காங்கேசன் – நாகை கப்பல் இன்று மீளவும் ஆரம்பம்

யாழ்ப்பாணம், ஜன.2

**இடைநிறுத்தப்பட்டுள்ள இலங்கை - இந்திய கப்பல் சேவை இன்று 2 ஆம் திகதி தொடக்கம் ஆரம்பிக் கப்படவுள்ளதாக அறிவிக்கப்பட்டுள்ளது.**

தமிழகம் மற்றும் இலங்கை இடையே மிக நீண்டகாலமாக இடம்பெற்று வந்த கப்பல் சேவை, கடந்த காலத்தில் நில விய போர் காரணமாக சுமார் 40 வருடங்களுக்கும் மேலாக இடைநிறுத்தப்பட்டிருந்தது. கடந்த 2023 ஆம் ஆண்டு பல்வேறு தரப்பினரின் பலத்த முயற்சி காரணமாகக் குறித்த கப்பல் சேவை மீண்டும் ஆரம்ப மானது. எனினும் வடக்கு-கிழக்கு பருவமழை காரண மாக சமீப நாட்களாக குறித்த கப்பல் சேவை இடைநிறுத்தி வைக்கப்பட்டிருந்தது. இந்த நிலையில், இன்று 2ஆம் திகதி தொடக்கம் கப்பல் சேவை மீண்டும் ஆரம்பிக்கப்படவுள் ளதாகவும், அதற்கான முன் பதிவுகள் டிசெம்பர் 25ம் திகதி தொடக்கம் ஆரம்பிக்கப்பட் டுள்ளதாகவும் தெரிவிக்கப்பட் டுள்ளது. (ச-இ)




இருட்டுத்தான் கயவர்களின்ர மறைவிடம் எண்டு சொல்லுவினம். எங்கையெல்லாம் இருட்டு இருக்கோ அங்கையெல்லாம் ஏதோ ஒரு கெட்டது நடக்கிறதுக்கு சான்ஸ் கூடத்தான். அப்பிடித்தான் இஞ்சையிருக்கிற பஸ் ஸ்ராண்டுகளும் பொழுது பட்டதுமே இருட்டுக்க இருக்கிறதால, உலகத்தில உள்ள கேடுகெட்ட காரியங்கள் எல்லாம் அங்க நடக்குது. இரவில தூர இடத்துக்குப் போறவை மட் டும் தான் பஸ் ஸ்ராண்டில நிப்பினம். அதுவும் கூடுதலா அவை பஸ் ஸ்ராண்டுக்கு உள்ளுக்க போறேலை. வெளியில தான் நிக்கிறவை. ஏனெண் டால் உள்ளுக்க இருக்கிறதை விட வெளியில நிக்கிறது பாதுகாப்பு எண்ட நிலைமை. இப்பிடி பஸ் ஸ்ராண்டுகளுக்குள்ள ஆக்களில்லாமல் இருக்கிறதும், அங்க வெளிச்சமே இல்லாததும் கனபேருக்கு வாய்ப்பா போட்டுது. கஞ்சா கடத்தி றவையில இருந்து குடிகாரர், பாலியல் தொழில் செய்யிற ஆக்கள் வரை அங்கதான் அடைக்கல மாவினம். வடக்கில இருக்கிற பஸ் ஸ்ராண்டுகளில இப்பிடியான கூத்துகளுக்கு குறைவிருக்கிறேலை. அநேகமான பஸ் ஸ்ராண்டுகளில இதுதான் நிலைமை.

பஸ் ஸ்ராண்டுகளில இப்பிடி குற்றங்கள், கலாசாரசீரழிவுகள் நடக்காமல் தடுக்கிறதுக்கு ஆரும் எந்த நடவடிக்கையும் எடுக்கிறேலை. பொலிஸ்காரர் கூட இந்த பஸ் ஸ்ராண்டுகளுக்குள்ள பெரிசா எட்டிப் பாக்கிறேலை. அவைக்கும் பயமோ தெரியேலை. உந்த பஸ் ஸ்ராண்ட் குற்றங்களைத் தடுக்க சிம்பிளா ஒரு வழியிருக்கு. எல்லா பஸ் ஸ்ராண்டுக்கும் லைட் பூட்டி விடுறதுதான் அந்த வழி. எல்லா இடமும் வெளிச்சமா இருந்தால் இப்பிடியான வேலையள் நடக்கிறது சரியாக் குறைஞ்சிடும். இரவில பஸ்ஸுக்கு நிக்கிறவையும் உள்ளுக்க நிப்பினம். ஆக்களும், வெளிச்சமும் இருக்கிற இடத் தில குற்றங்கள் குறையிறது இயல்புதானே. லைட் போட்டால் அதுக்கு ஆர் கரண்ட் பில் கட்டுறது? எண்டு டிப்போக்காரரோ, இல்லாட்டி அந்த பஸ் ஸ்ராண்டுக்கு பொறுப்பான உள்ளூராட்சி அமைப்புகளோ வரிஞ்சு கட்டிக்கொண்டு வரலாம். அதுக்கும் ஒரு வழி இருக்கு.

பெரும்பாலான பஸ் ஸ்ராண்டுகள், கொளுத்திற வெயிலுக்குள்ளதான் இருக்கிறதைப் பாக்கிறம். நிழலுக்கு ஒரு மரம் கூட இருக்கிறேலை. அப்பிடி வெயிலின்ர ராச்சியம் நடக்கிற பஸ் ஸ்ராண்டில சோலரைப் பூட்டினால் பஸ் ஸ்ராண்டுக்குள்ள எரியிற கரண்டுக்கு ஏன் காசு கட்டோனும்? அதோட மிச்சமா இருக்கிற கரண்டையும் அரசாங்கத்துக்கே வித்தால் அதால மேலதிகமா இன்னொரு வரு மானமும் கிடைக்கும். வருமானத்துக்கு வருமானமு மாச்சு, பஸ் ஸ்ராண்டுக்கு லைட் போட்டமாதிரியு மாச்சு. ஒருக்கா இதுகளைப் பற்றி உரியவை யோசிச்சு செய்தினம் எண்டால், இப்பிடி பொது இடங் களில நடக்கிற குற்றங்களை ஒழிக்காட்டியும் குறைக்கலாமெல்லோ.

padsi@uthayan.com – பட்சி

## பாலைமரக் குற்றிகளுடன் இருவர் சிக்கினர்

யாழ்ப்பாணம், ஜன.2

பாலை மரக்குற்றிகளை வாகனத்தில் மறைத் துக் கடத்திய குற்றச்சாட்டில் இருவர் யாழ்ப் பாணம் வனவளப் பாதுகாப்புத் திணைக்க ளத்தினால் நேற்று கைதுசெய்யப்பட்டுள்ள னர்.

பூநகரி பிரதேசத்திலிருந்து பாலை மரக்குற் றிகள் சட்டவிரோதமாக கடத்திச் செல்லப்படு கின்றது என திணைக்களத்தினருக்கு கிடைத்த புலனாய்வு தகவலுக்கமைய நாவற்குழி பகு தியில் வைத்து குறித்த வாகனத்தை மறித்து சோதனையிட்டபோதே பாலைமரக் குற்றிகள் கைப்பற்றப்பட்டன.

அத்துடன் அவற்றைக் கடத்தி வந்த வாகனத் தின் சாரதி மற்றும் உதவியாளர் ஆகியோரும் கைதுசெய்யப்பட்டனர்.

சந்தேகநபர்கள் இருவரையும் நீதிமன்றில் முற்படுத்த வனவளத் திணைக்களத்தினர் நடவடிக்கை எடுத்துள்ளனர். (ச-125)

## 233,087 சுற்றுலாவிகள் டிசெம்பரில் வருகை

கொழும்பு, ஜன. 2

2024 ஆம் ஆண்டின் ஜனவரி மாதம் முதல் டிசெம்பர் 29 ஆம் திகதி வரையான காலப்பகுதி யில் 2,037,960 சுற்றுலாப் பயணிகள் இலங் கைக்கு வருகை தந்துள்ளனர்.

அத்துடன் டிசெம்பர் மாதத்தின் 29 நாள்களில் மாத்திரம் 233,087 சுற்றுலாப் பயணிகள் நாட் டுக்கு வருகை தந்துள்ளதாக இலங்கை சுற்றுலா அபிவிருத்தி அதிகார சபை தெரிவித்துள்ளது.

அந்தவகையில் இந்த வருடத்துக்கான 2 மில்லி யன் சுற்றுலாப் பயணிகளின் வருகை இலக்கை இலங்கை அடைந்துள்ளது. (ச-இ)

## பிறப்பு வீதம் கடும் வீழ்ச்சி

கொழும்பு, ஜன. 2

இலங்கையில் வருடாந்த பிறப்பு வீதம் கணிசமான வீழ்ச்சியை பதிவு செய்துள்ளதாக குழந்தை நல மருத்துவ ஆலோசகர் மருத்துவர் தீபால் பெரேரா தெரிவித்துள்ளார்.

இலங்கையின் வருடாந்த பிறப்பு வீதம் 350,000 இலிருந்து 250,000 ஆக குறைந்துள்ளது. ஆட்டிசம் மட்டுமின்றி புற்றுநோய், நீரிழிவு நோய் போன்ற நோய் களும் குழந்தைகளை அதிகம் பாதிப்பதாகத் தெரிய வந் துள்ளது என்றும் தீபால் பெரேரா குறிப்பிட்டுள்ளார். (ச)



## மனுஷ மீது முறைப்பாடு

கொழும்பு, ஜன. 2

முன்னாள் தொழில் மற்றும் வெளி நாட்டு வேலைவாய்ப்பு அமைச்சர் மனுஷ நாணயக்காரவுக்கு எதிரா கக் குற்றப்புலனாய்வுத் திணைக்க ளத்தில் முறைப்பாடொன்று முன் வைக்கப்பட்டுள்ளது.

கையூட்டல் மற்றும் ஊழலுக்கு எதி ரான மக்கள் சக்தி என்ற அமைப் பின் தலைவர் ஜாமுனி கமந்த துஷாரவினால் இந்த முறைப்பாடு அளிக்கப்பட்டுள்ளது. அவரது சொத்துகள் தொடர்பில் விசாரணை மேற்கொள்ளுமாறு கோரி இந்த முறைப்பாடு அளிக்கப்பட்டுள்ளதா கத் தெரிவிக்கப்பட்டுள்ளது. (ச-இ)

## சைபர் தாக்குதல்கள் அரசு விசாரணை!

கொழும்பு, ஜன. 2

அரச இணையத்தளங்கள் மற்றும் சமூக வலைத்தளங்கள் மூன்றாம் தரப்பினரால் ஊடுருவப்பட்டமை தொடர்பில் விசா ரணைகள் ஆரம்பிக்கப்பட்டுள்ளதாக அமைச்சரவைப் பேச்சா ளர் அமைச்சர் நளிந்த ஜயதிஸ்ஸ தெரிவித்துள்ளார்.

பொலிஸ் திணைக்களத்தின் யூரியூப் தளமும் மூன்றாம் தரப் பினரால் ஊடுருவப்பட்டுள்ளது. அத்துடன் அரச அச்சகத் திணைக்களத்தின் உத்தியோகபூர்வ இணையத்தளம் சைபர் தாக்குதலுக்கு இலக்காகியுள்ளது. எந்த வழியில் இவ்வாறான சம்பவங்கள் இடம்பெறுகின்றன என்பது குறித்த விசாரணை கள் ஆரம்[illegible] (ச-இ)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இன்றைய (ராசிபலன்)

**மேடம்:** அதிர்ஷ்டகரமான நாள். புதிய முயற்சிகள் சாதகமாக முடியும். சகோதர வகையில் எதிர்பாராத ஆதாயம் ஏற்படக்கூடும். தந்தை வழி உறவினர்களால் அனுகூலம் உண்டாகும். உறவினர்கள் வருகையால் குடும்பத்தில் மகிழ்ச்சியுடன் செலவுகளும் ஏற்படும்.

**இடபம்:** பரபரப்பான நாளாக இருக்கும். பிள்ளைகளால் தேவையற்ற செலவுகள் ஏற்படக்கூடும். சிலருக்கு வயிறு தொடர்பான பிரச்சினைகள் ஏற்படக்கூடும் என்பதால், உணவு விஷயத்தில் கவனமாக இருக்கவும். சில சங்கடங்கள் ஏற்படக்கூடும்.

**மிதுனம்:** புதிய முயற்சிகளைத் தவிர்க்கவும். உடல் நலனில் கவனம் தேவை. உறவினர்கள் உதவி கேட்டு வருவார்கள். கருத்துவேறுபாடு நீங்கி அந்நியோன்யம் அதிகரிக்கும். வீட்டில் உற்சாகம் ஏற்படும்.

**கடகம்:** அரசாங்கக் காரியங்கள் அனுகூலமாக முடியும். ஆனால், புதிய முயற்சிகளில் ஈடுபடுவதைத் தவிர்க்கவும். வாழ்க்கைத்துணைவழியில் செலவுகள் ஏற்படக்கூடும். இளைய சகோதர வகையில் ஆதாயம் உண்டாகும்.

**சிம்மம்:** தொடங்கும் காரியங்கள் சாதகமாக முடியும். சிலருக்கு திடீர் செலவுகளால் கையிருப்புக் குறையும். நண்பர்களின் சந்திப்பு மகிழ்ச்சி தருவதாக இருக்கும். உணவு வகைகளால் அலர்ஜி ஏற்படக்கூடும் என்பதால் கவனம் தேவை.

**கன்னி:** எந்த முடிவையும் ஒருமுறைக்குப் பலமுறை யோசித்து எடுப்பது நல்லது. குடும்பத்தில் மற்றவர்களுடன் அனுசரித்துச் செல்லவும். பொறுமை அவசியம். தாயின் உடல் ஆரோக்கியத்தில் கவனம் செலுத்தவும். பணிகளில் கூடுதல் கவனம் தேவை.

**துலாம்:** உற்சாகமாகச் செயற்படுவீர்கள். குடும்பத்தில் உள்ளவர்களின் தேவைகளை நிறைவேற்ற செலவு செய்ய நேரிடும் என்பதால், கையிருப்பு கரையும். உங்கள் பொறுப்புகளைப் பகிர்ந்துகொள்வது ஆறுதலாக இருக்கும்.

**விருச்சிகம் :** உற்சாகமான நாள். தொட்ட காரியங்கள் வெற்றிகரமாக முடியும். குடும்பத்தினர் உங்கள் ஆலோசனையை ஏற்றுக்கொள்வார்கள். சிலருக்கு எதிர்பாராத பணவரவுக்கும் வாய்ப்பு உண்டு. எதிர்பார்த்த சலுகை கிடைக்கும்.

**தனுசு:** உற்சாகமான நாள். சகோதரர்கள் வகையில் அலைச்சலுடன் ஆதாயமும் இருக்கும். அவசர முடிவுகளைத் தவிர்க்கவும். திடீர் பணவரவுக்கும் வாய்ப்பு உண்டு. சக ஊழியர்கள் அனுசரணையாக நடந்துகொள்வார்கள்.

**மகரம்:** எதிலும் அவசரமில்லாமல் செயற்படவேண்டிய நாள். உறவினர்களுடன் வீண் மனஸ்தாபம் ஏற்படக்கூடும் என்பதால் பொறுமையைக் கடைப்பிடிக்கவும். பிள்ளைகளால் செலவுகள் ஏற்படக்கூடும். செலவுகளால் கையிருப்பு கரையும்.

**கும்பம்:** மனதில் இனம் தெரியாத குழப்பம் ஏற்படக்கூடும். அன்றாடப் பணிகளிலும் கூடுதல் கவனம் தேவை. தாய்வழி உறவுகளுக்காக செலவு செய்யவேண்டியிருக்கும் கணவன் மனைவிக்கிடையே வீண் விவாதங்கள் ஏற்படக்கூடும்.

**மீனம்:** புதிய ஆடை, ஆபரணங்களை வாங்கும் யோகம் உண்டாகும். உறவினர்கள் வருகையால் வீட்டில் கலகலப்பான சூழ்நிலை ஏற்படும். புதிய முயற்சிகள் சாதகமாக முடியும். வாழ்க்கைத்துணையால் மகிழ்ச்சி உண்டாகும்.

### வரதராஜப்பெருமாள்
## கொடியேற்றம்

யாழ்ப்பாணம், ஜன 2

வரலாற்றுச் சிறப்புமிக்க பொன்னாலை ஸ்ரீ வரதராஜப் பெருமாள் ஆலய மார்கழி மாத வைகுண்ட ஏகாதசி தின மஹோற்சவம் இன்று வியாழக்கிழமை நண்பகல் 12 மணிக்கு கொடியேற்றத்துடன் ஆரம்பமாகவுள்ளது.

தொடர்ந்து 10 தினங்கள் நடைபெறும் திருவிழாவில் வைகுண்ட ஏகாதசி நன்னாளான எதிர்வரும் 10 ஆம் திகதி வெள்ளிக்கிழமை தேர்த்திருவிழா இடம்பெறும். அன்றைய தினம் அதிகாலை 3 மணியளவில் சங்காபிசேகம், அதிகாலை 5 மணியளவில் சுவர்க்கவாயில் தரிசனம், காலை 8.30 மணியளவில் வசந்த மண்டபப் பூசையைத் தொடர்ந்து மு.ப. 10.25 மணியளவில் சித்திரத்தேரில் வரதராஜப் பெருமான் ஆரோகணிப்பார்.

மறுநாள் 11 ஆம் திகதி சனிக்கிழமை காலை 8 மணியளவில் வரதராஜப் பெருமான் மஞ்சத்தில் திருவடி நிலைக் கடற்கரைக்குப் புறப்பட்டுத் தொடர்ந்து தீர்த்தோற்சவம் நடைபெறும் (ரி-45-66)



பிறந்திருக்கும் ஆங்கிலப் புத்தாண்டு தினத்தை முன்னிட்டு வரலாற்றுச் சிறப்புமிக்க நல்லையம்பதி கந்தசுவாமி தேவஸ்தானத்தில் விஷேட தீபத் திருவிளக்கேற்றல் நிகழ்வு நேற்று நள்ளிரவு தேரடிக்கு அருகாமையில் பக்திபூர்வமாக இடம்பெற்றது. (ச-27)

## குமார் பொன்னம்பலத்தின் நினைவேந்தல் நிகழ்வு

யாழ்ப்பாணம்,ஜன.2

மாமனிதர் குமார் பொன்னம்பலத்தின் 25 ஆம் ஆண்டு நினைவு வணக்க நிகழ்வும் நினைவுப் பேருரையும் யாழ்ப்பாணம், இல. 286 கலைத் தூது கலையகத்தில் எதிர்வரும் 5 ஆம் திகதி ஞாயிற்றுக்கிழமை பி.ப. 3 மணிக்கு இடம்பெறவுள்ளது.

யாழ். பல்கலைக்கழகத்தைச் சேர்ந்த பேராசிரியர் ச. ரகுராம் 'மக்கள் மயப்படுத்தப்படவேண்டிய அரசியல்' எனும் தலைப்பில் நினைவுப்பேருரையை நிகழ்த்தவுள்ளார். நிகழ்வில் அனைவரையும் கலந்துகொள்ளுமாறு நினைவேந்தல் ஏற்பாட்டுக் குழுவினர் தெரிவித்துள்ளனர். (ச-33)

## நடமாடும் சேவை மன்னாரில் இன்று

மன்னார், ஜன. 2

வடக்கு மாகாண ஆளுநர் நா. வேதநாயகன் தலைமையில் இடம்பெறும் நடமாடும் சேவை மன்னார் மாவட்டச் செயலகத்தில் இன்று வியாழக்கிழமை காலை இடம்பெறவுள்ளது.

மன்னார் மாவட்டப் பொதுமக்கள் இந்த நடமாடும் சேவையில் கலந்துகொண்டு தமக்குரிய சேவைகளைப் பெற்றுக்கொள்ள முடியுமென அறிவிக்கப்பட்டுள்ளது. (ச-66)

## திருவெம்பாவை சனிக்கிழமை ஆரம்பம்

யாழ்ப்பாணம், ஜன.2

கோப்பாய் வடக்கு இலுப்பையடிக் கிராமத்தில் உள்ள விநாயகர் ஆலயத்தில் நாளைமறுதினம் சனிக்கிழமை திருவெம்பாவைப் பூசை தொடங்கி தொடர்ந்து பத்து நாள்கள் இடம்பெறும். தினமும் மு.ப 10 மணிக்கு சிறப்புப் பூசை வழிபாடும் இடம்பெற்று திருவெம்பாவைப் படிப்பும் இடம்பெறும். அத்துடன் கொழும்புத்துறை விநாயகர் ஆலயத்திலும் திருவெம்பாவைப் பூசை இடம்பெறும் என்றும் தெரிவிக்கப்பட்டுள்ளது. (ச-33-17)

## கணபதி ஹோமம்

யாழ்ப்பாணம்,ஜன.2

கோப்பாய் வடக்கு இலுப்பையடி வீரகத்தி விநாயகர் ஆலயத்தில் விநாயகர் சஷ்டி விரதத்தின் இறுதி நாளான எதிர்வரும் 5 ஆம் திகதி ஞாயிற்றுக்கிழமை மு.ப. 9 மணிக்கு அபிஷேகம், மகா கணபதி ஹோமம், பஞ்சமுக அர்ச்சனை, பெருங்கதைப் படிப்பு போன்றன இடம்பெறவுள்ளன. அன்றைய தினமே பி.ப. 4 மணிக்கு சிறப்புப் பூசை, திருவூஞ்சல் மற்றும் சுவாமி வீதி வலம் வருதல் என்பன நடைபெறும் எனவும் தெரிவிக்கப்பட்டுள்ளது. (ச-33-17)

## மோ. சைக்கிள் திருட்டு; சிறுவர்கள் கைது

கிளிநொச்சி, ஜன. 2

கிளிநொச்சி பொலிஸ் பிரிவுக்குட்பட்ட கண்டாவளைப் பகுதியில் நிறுத்தி வைக்கப்பட்டிருந்த மோட்டார் சைக்கிளைத் திருடிய இரு சிறுவர்கள் பொலிஸாரால் கைதுசெய்யப்பட்டு நீதிமன்றத்தில் முற்படுத்தப்பட்டுள்ளனர்.

கண்டாவளை கொம்படி அம்மன் கோவிலுக்கு முன்பாக கடற்கரையோரத்தில் மோட்டார் சைக்கிள் ஒன்று களவாடப்பட்டதாக உரிமையாளரால் தருமபுரம் பொலிஸ் நிலையத்தில் முறைப்பாடு பதிவு செய்யப்பட்டது.

சம்பவம் குறித்து தருமபுரம் பொலிஸாரால் கிளிநொச்சி பொலிஸாருக்குத் தகவல் வழங்கப்பட்டதையடுத்து கிளிநொச்சி பொலிஸ் நிலையத்தின் குற்றப் புலனாய்வுப் பிரிவின் பொறுப்பதிகாரி விஜயராசா தலைமையிலான குழுவினர் மேற்கொண்ட விசாரணைகளின் அடிப்படையில், மருதங்கேணி பிரதேசத்தைச் சேர்ந்த 15 மற்றும் 16 வயதுடைய இரண்டு சிறுவர்கள் கைது செய்யப்பட்டனர். அத்துடன் களவாடப்பட்ட மோட்டார் சைக்கிளும் மீட்கப்பட்டது.

சந்தேகநபர்கள் இருவரையும் நீதிமன்றில் முற்படுத்திய நிலையில் அவர்களை பிணையில் செல்வதற்கு நீதிவான் அனுமதியளித்தார். (ச-27)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உதயன்
மக்கள் மனம் நிறைந்த தமிழ் நாளிதழ்
உண்மை - நேர்மை - அஞ்சாமை

நாளொரு நல்வார்த்தை

அமைதி மற்றும் நேர்மை ஆகியவை ஒரு நாணயத்தின் இரண்டு பக்கங்கள்.

- ட்வைட் டி ஐசனோவர் -

# சுத்தமாகுமா யாழ்.நகரம்?

புதுவருடம் பிறந்த கையோடு யாழ்ப்பாணம் மாநகர சபையும் புதியதொரு செயற்றிட்டத்தை அறிமுகப்படுத்தியிருக்கிறது. திண்மக்கழிவகற்றலுக்கு ஒவ்வொரு வீட்டுக்கும் பதிவு அட்டை வழங்குவதே அந்தப் புதிய திட்டம். இப்படிப் பதிவு அட்டையை வழங்குவதால் என்ன நடந்துவிடப்போகின்றது? இதிலென்ன புதுமை இருக்கிறது? என்றெல்லாம் சில கேள்விகள் எழலாம். ஆனால் உண்மையில் ஆழமாக நோக்கினால், குறித்த பதிவு அட்டை வழங்கி, திண்மக் கழிவகற்றலை அதன்படி சரியாக நடைமுறைப்படுத்தினால், 'தூய இலங்கை' என்னும் தேசிய இலக்கினை யாழ். மாநகரசபை எல்லைக்குள் மிக இலகுவாகவே கண்டுணரக் கூடியதாக இருக்கும்.

இதுவரை காலமும் தனது ஆளுகைக்குட்பட்ட வீடுகளில் உள்ள திண்மக்கழிவுகளை யாழ்.மாநகரசபையே அகற்றி வருகின்றது. ஆனாலும் மாநகரசபையின் இந்தச் சேவை சீரில்லை எனவும், எல்லா வீடுகளுக்கும் கழிவகற்றல் வாகனம் செல்வதில்லை எனவும் பலர் குற்றம் சாட்டவும் தவறவில்லை. இதன் விளைவாக, மாநகரசபை கழிவகற்றலை மேற்கொள்ளாத வீடுகளில் இருப்போர் குப்பைகளின் அளவு அதிகரிப்பதைத் தடுக்க, அவற்றை எங்காவது வீதிகளில் வீசிவிட்டுச் சென்றுவிடுகின்றனர். அந்தக் கழிவுப்பொதிகளை கட்டாக்காலி விலங்குகள் பிய்த்துக் குதறி வீதியெங்கும் பரப்பி, அதனூடாகப் பயணிப்போரை மூக்கைப் பிடித்தபடி செல்லவேண்டிய நிலைக்குத் தள்ளுகின்றன. அத்தோடு இவ்வாறு பரவும் கழிவுகளால் அந்த வீதிகள் நாறிப்போய், கழிவுகளுக்குள் மூழ்குவதுடன்,அக்கம் பக்கத்தில் உள்ளோரும் சுகாதாரப் பிரச்சினைகளை எதிர்கொள்ளவேண்டியிருக்கிறது. ஆனால் மாநகரசபை அறிமுகப்படுத்தியுள்ள திண்மக்கழிவகற்றல் பதிவு அட்டை மூலம் இந்தப் பிரச்சினைக்குத் தீர்வு காணக்கூடிய சூழல் கனிந்திருக்கிறது. எந்தெந்த வீடுகளுக்கு எப்போது கழிவகற்றச் செல்லவேண்டும் என்ற ஒழுங்கு அட்டவணை சரியாகப் பேணப்படுகிறதா என்பதை இந்தப் பதிவு அட்டை மூலம் கண்காணிக்க முடியும். இதனால் திண்மக் கழிவகற்றலில் எந்தவொரு வீடும் விடுபடாமல் சீரான கால ஒழுங்கில் கழிவுகளை அகற்றும் நிலை உறுதிசெய்யப்படும். அப்படிச் சீராகத் திண்மக்கழிவுகளை அகற்றினால், வீடுகளில் குப்பையும் தேங்காது, அதனைப் பொதியாக்கி வீதிகளில் வீசியெறியும் நிலையும் உண்டாகாது.

இதையும் மீறி வீதிகள், பொது இடங்கள் போன்றவற்றில் குப்பைகளை வீசுவோர் மீது கடுமையான நடவடிக்கை மேற்கொள்ளப்படவுள்ளதாகவும் யாழ்.மாநகரசபை அறிவித்துள்ளது. ஆனால் இது எந்தளவுதூரம் சாத்தியமெனத் தெரியவில்லை. 'அட்டையைக் குளிப்பாட்டி மெத்தையில் வைத்தாலும் அது செத்தைக்குள் தான் போகும்' என்பதைப் போல, என்னதான் வீடுகளுக்குச் சீராகச் சென்று, கழிவுகளை அகற்றி வந்தாலும் வீதிகளில் அவற்றை வீசுவதை சிலர் தங்களின் விருப்பத்துக்குரிய பொழுதுபோக்காவே மாற்றி விட்டனர்.அவர்களுக்கு தங்களின் நகரமும், சூழலும் சுத்தமாக இருப்பது பிடிக்காது போலும். அதனைக் குப்பையாக்கி, சுகாதாரக் கேடுகளை உருவாக்கி, நாற்றமடிக்கும் நகரமாக வைத்திருப்பதுதான் அவர்களின் இலக்கு. இவர்கள் எங்கு, எப்போது குப்பைகளை வீசுவார்கள் என்று கண்காணிக்குமளவுக்கு ஆளணி மாநகரசபையிடம் இல்லையென்பதே உண்மை. குறைந்தபட்சம் கண்காணிப்புக் கமெராக்கள் மூலம் இவர்களை இனங்கண்டு நடவடிக்கை எடுக்கலாம். அதற்கும் மாற்று ஏற்பாடாக அவர்கள் முகத்தை மறைத்தபடி வந்து கழிவுகளை வீசிவிட்டுச் சென்றால், எதுவும் செய்யமுடியாது.

இருப்பினும் இயலுமானவரை அவர்களைக்கண்டறிந்து, தண்டம் விதிப்பதன் மூலம் காலப்போக்கில் வீதிகளில் கழிவுகளை வீசும் செயற்பாட்டைக் குறைக்கவும் இடமுண்டு. எதையும் ஆரம்பத்தில் நன்றாகச் செய்துவிட்டு,பின்னர் கழுதை தேய்ந்து கட்டெறும்பாவதைப் போல சொதப்புவதே எந்தத் திட்டத்தினதும் தலைவிதியாக இருந்தது, இருக்கின்றது. அதைப் போல திண்மக் கழிவகற்றலுக்கான பதிவு அட்டைத் திட்டத்தைக் கைவிடாமல், சீராகவும்,வினைத்திறனோடும் செய்தால் சுத்தமான நகரமாக யாழ்ப்பாணம் விரைவில் மாறும். இந்தத் திட்டத்தை நடைமுறைப்படுத்திய மாநகரசபைக்கும், ஆணையாளருக்கும் பாராட்டுகள்.

செய்தி : 021 493 0000
விளம்பரம் : 021-493 1111
செய்தி : news@uthayan.com
விளம்பரம் : advt@uthayan.com




## மார்ச் மாத இறுதிக்குள் உள்ளூராட்சித் தேர்தல்

கொழும்பு, ஜன. 2

எதிர்வரும் மார்ச் மாத இறுதியில் உள்ளூராட்சிசபைத் தேர்தல் நடைபெறவுள்ளதை ஆளுங்கட்சியான தேசிய மக்கள் சக்தியின் செயலாளரும், நாடாளுமன்ற உறுப்பினருமான மருத்துவர் நிஹால் அபேசிங்க உறுதிப்படுத்தியுள்ளார்.

நாடாளுமன்ற உறுப்பினர்கள் மாத்திரமே தற்போதைய சூழ்நிலையில் மக்கள் பிரதிநிதிகளாக உள்ளனர். உள்ளூராட்சிசபை மற்றும் மாகாணசபைகளில் மக்கள் பிரதிநிதிகள் இல்லை. எனவே, விரைவில் தேர்தலை நடத்தி உள்ளூராட்சிசபைகளுக்கு தமது பிரதிநிதிகளைத் தெரிவுசெய்வதற்குரிய வாய்ப்பை மக்களுக்கு வழங்குவதற்கு எதிர்பார்க்கின்றோம். அந்தவகையில் மார்ச் இறுதியில் தேர்தல் நடத்தப்பட்டு, ஏப்ரல் மாதத்துக்குள் உள்ளூராட்சி சபைகளை நிறுவுவதற்கும் உத்தேசித்துள்ளோம் என்றும் குறிப்பிட்டார். (ச-44)

## வருமான ஈட்டல் சுங்கம் சாதனை

கொழும்பு, ஜன. 2

இலங்கை சுங்கத்துறை கடந்த வருடத்தில் 1.5 ட்ரில்லியன் ரூபாவுக்கும் அதிகமான வருமானத்தைப் பதிவு செய்துள்ளது.

இதன்படி, கடந்த வ்ருடம் 1.515 இலட்சம் கோடி ரூபா வருமானம் பதிவாகியுள்ளதாக சுங்க ஊடகப் பேச்சாளரும், மேலதிக சுங்கப் பணிப்பாளர் நாயகமுமான சீவலி அருக்கொட தெரிவித்துள்ளார். வருடமொன்றில் இலங்கை சுங்கத்தால் ஈட்டப்பட்ட அதிகூடிய வருமானம் இதுவாகும் என்றும் தெரிவிக்கப்பட்டுள்ளது. (ச-இ)

## ரயர் விலையை குறைக்க இணக்கம்

கொழும்பு,ஜன.2

உள்நாட்டு ரயர் ஒன்றின் விலையைக் குறைக்க உள்நாட்டு ரயர் உற்பத்தியாளர்கள் இணக்கம் தெரிவித்துள்ளனர் என வர்த்தக அமைச்சர் வசந்த சமரசிங்க தெரிவித்துள்ளார்.

எதிர்காலத்தில் தேவைக்கு அதிகமாக ரயர்கள் இறக்குமதி செய்யப்பட்டால் இறக்குமதி செய்யப்படும் ரயர்களுக்குக் கட்டுப்பாடுகளை விதிக்குமாறு உள்நாட்டு ரயர் உற்பத்தியாளர்கள் சங்கம் கோரிக்கை விடுத்துள்ளதாகவும் வர்த்தக அமைச்சர் வசந்த சமரசிங்க தெரிவித்துள்ளார். (ச-இ)

## ரஞ்சனிடம் விசாரணை

கொழும்பு, ஜன. 2

முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினர் ரஞ்சன் ராமநாயக்கவிடம் குற்றப் புலனாய்வுப் பிரிவினர் விசாரணை நடத்தியுள்ளனர். கொழும்பு பேராயர் மல்கம் ரஞ்சித் ஆண்டகையை அவதூறு செய்யும் வகையில், ரஞ்சன் கருத்து வெளியிட்டாரா என்பது குறித்து விசாரணை நடத்தப்பட்டுள்ளது. (ச-இ)

## அரச திணைக்களங்கள் மீதான முறைப்பாடுகள் விசாரிக்கக் குழு

கொழும்பு, ஜன. 2

அரச திணைக்களங்களுக்கு எதிராகக் கிடைக்கும் முறைப்பாடுகளை விசாரிப்பதற்கென ஒரு விசாரணைப்பிரிவை ஜனாதிபதி நியமிக்கவுள்ளார். இந்த விசாரணைப்பிரிவுக்கு புலனாய்வுத் துறையில் தேர்ச்சி பெற்ற ஒருவர் தலைவராக நியமிக்கப்படவுள்ளார்.

அரச திணைக்களங்களில் காணப்படும் குறைபாடுகள், பொதுமக்கள் எதிர்நோக்கும் இடர்பாடுகள் போன்றவற்றை பல்வேறு தரப்பு தகவல்களினூடாக ஆராய்ந்து மக்கள் மனதில் நம்பிக்கையைக் கட்டியெழுப்பும் வகையில் மக்கள் சேவையை முன்னெடுப்பதே இந்த விசாரணைப்பிரிவின் நோக்கம் எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது. (ச-6)

நாளை
வெள்ளிக்கிழமை - மார்கழி - 20
03.01.2025
சுபநேரம் : 10.30 - 11.30
ராகுகாலம் : 01.30 - 03.00

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# 'தூய இலங்கை' வடக்கில் உறுதியேற்பு



**யாழ்ப்பாணம்**



யாழ். மாவட்டச் செயலகத்தின் 2025 ஆம் ஆண்டில் 'தூய இலங்கை' நிகழ்ச்சித்திட்டத்தை சத்தியப் பிரமாணம் எடுத்து ஆரம்பிக்கும் நிகழ்வு, மாவட்டச் செயலர் ம. பிரதீபன் தலைமையில் மாவட்டச்செயலக முன்றலில் நேற்றுப் புதன்கிழமை நடைபெற்றது. (ச- 25, 9)

**வவுனியா**






வவுனியா மாவட்டச் செயலகத்தில் 'தூய இலங்கை' வேலைத்திட்டம் உறுதியுரையுடன் நேற்று ஆரம்பித்து வைக்கப்பட்டது. (ச-110)

**முல்லைத்தீவு**





2025 ஆம் ஆண்டுக்கான கடமைகளை ஆரம்பிக்கும் நிகழ்வு முல்லைத்தீவு மாவட்டச் செயலர் அ.உமாமகேஸ்வரன் தலைமையில் நேற்று முல்லைத்தீவு மாவட்டச்செயலகத்தில் நடைபெற்றது. தொடர்ந்து ஜனாதிபதி தலைமையில் நடைபெற்ற 'தூய இலங்கை' தேசிய வேலைத்திட்ட நிகழ்வில் உத்தியோகத்தர்கள் நேரலை ஊடக இணைந்திருந்தனர். (ச-19)



**மன்னாரில்**

**கிளிநொச்சி**



கிளிநொச்சி மாவட்டச் செயலகத்தில் மாவட்ட பதில் மாவட்டச் செயலர் எஸ்.முரளீதரன் தலைமையில் மாவட்டச் செயலக உத்தியோகத்தர்கள் தமது புதுவருட கடமைகளை நேற்று ஆரம்பித்தனர். தொடர்ந்து ஜனாதிபதி செயலகத்திலிருந்து தூய இலங்கை' நிகழ்ச்சித் திட்டத்தை ஆரம்பித்து வைக்கும் தேசிய விழாவுடன் உத்தியோகத்தர்கள் இணைந்து கொண்டனர். (ச-113)



2025 ஆம் ஆண்டுக்கான கடமைகளை வைபவ ரீதியாக ஆரம்பிக்கும் நிகழ்வு நேற்று மன்னார் மாவட்டச் செயலர் க.கனகேஸ்வரன் தலைமையில் மாவட்டச்செயலகத்தில் சிறப்பாக நடைபெற்றது. உத்தியோகத்தர்கள் அனைவரும் 'தூய இலங்கை' திட்டத்துடன் இணைக்கப்பட்ட உறுதி மொழியை எடுத்துக் கொண்டனர். (ச-56)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கண்ணீர் அஞ்சலி



மண்ணில் 09.11.1951 — விண்ணில் 29.12.2024

எமது யாழ்ப்பாணம் தேசிய கல்வியியற் கல்லூரியின்
விரிவுரையாளர்
**திருமதி சிந்துஜா கௌசிகன்** அவர்களின்
பாசமிகு தந்தையார்.

## செல்லையா ஜெயபாலசிங்கம்

அவர்களின் பிரிவால் துயருற்றிருக்கும்
குடும்பத்தினரின் துயரில் நாமும்
பங்கெடுப்பதுடன் அன்னாரின் ஆத்மா
சாந்தியடையவும் இறைவனைப்
பிரார்த்திக்கின்றோம்

கல்லூரிச் சமூகம்
யாழ்ப்பாணம் தேசிய கல்வியியற் கல்லூரி

(cs.57097) (N-1)

# தொழில்நுட்ப அலுவலர் தேவை

ஊர்காவற்றுறையில் (தீவுப்பகுதியில்)
அமைந்த இந்துக் கோயில் ஒன்றை
கட்டடமேற்பார்வை செய்வதற்கு ஓய்வு பெற்ற
அரச தொழில்நுட்ப அலுவலர் தேவை.

தொடர்பு:- **076 129 5913**

(CS/57094) J-1

# மரண அறிவித்தல்



தோற்றம் 27 - 10 - 1952

மறைவு 30 - 12 - 2024

## ஏரம்பமூர்த்தி சறோஜினிதேவி

யாழ். புங்குடுதீவு 6 ஆம் வட்டாரம் இறுப்பிட்டியைப் பிறப்பிடமாகவும் இல.412, கே.கே.எஸ். வீதி. யாழ்ப்பாணத்தை வசிப்பிடமாகவும் கொண்ட ஏரம்பமூர்த்தி சறோஜினிதேவி அவர்கள் கடந்த (30.12.2024) திங்கட்கிழமை இறைபதம் அடைந்தார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான கந்தையா - நல்லம்மா தம்பதியரின் அன்பு மகளும், காலஞ்சென்றவர்களான முத்துக்குமாரு (பொன்னம்பலம் ஆசிரியர்) - செல்லம்மா தம்பதியரின் அன்பு மருமகளும், ஏரம்பமூர்த்தி அவர்களின் அன்பு மனைவியும், வாசுகி (UK) சுபாஸ்கரன் (பிரான்ஸ்), பிரபாகரன் (ஆசிரியர் - மு / உடையார்கட்டு அ.த.க பாடசாலை), காண்டீபன் (UK), தேவகி (ஆசிரியை - யா / யாழ் இந்து மகளிர் கல்லூரி), காலஞ்சென்ற பார்த்தீபன் ஆகியோரின் அன்புத் தாயாரும், ரூபகலா, யசோதா, கயல்நிலா, சுதாகரன் ஆகியோரின் அன்பு மாமியாரும், பிரவின், மெலானி, நிதிலன், அகிலேஸ், இலக்கியா, புகழ்நிலா, அச்சுதன், அகிலயா, திவ்யன், சைந்தவி, மேகவி, மைவிழி, சதுர்யா, விவேகா, சேரன் ஆகியோரின் அன்புப் பேர்த்தியும், புஸ்பவதி (பிரான்ஸ்), காலஞ்சென்றவர்களான திருலோகநாதன் (ஶ்ரீசக்தி ஸ்ரோர்ஸ்), அருணகிரிநாதன் மற்றும் கருணாவதி (கிளி), பவானி (சோதி), சர்வலோகநாதன் (ஜேர்மனி), வைத்தீஸ்வரன் (கனடா) ஆகியோரின் அன்புச் சகோதரியும், காலஞ்சென்ற ஆறுமுகம் மற்றும் புஸ்பராணி, சுந்தராம்பாள், காலஞ்சென்றவர்களான இராமலிங்கம், மகாதேவன் மற்றும் செல்வகலா, யோகராணி ஆகியோரின் மைத்துனியும், சச்சிதானந்தம் (ஓய்வுபெற்ற நிர்வாக உத்தியோகத்தர் - திருகோணமலை), சிவதாசப்பிள்ளை (ஓய்வுபெற்ற தபாலதிபர்), காலஞ்சென்றவர்களான தங்கவேற்பிள்ளை, கோடிலிங்கப்பிள்ளை மற்றும் சசிதேவி (கனடா), காஞ்சனமாலை (உடையார்கட்டு), சிவாஜி (பிரான்ஸ்) ஆகியோரின் அண்ணியும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (02.01.2025) வியாழக்கிழமை முற்பகல் 11.00 மணியளவில் அவரது இல்லத்தில் நடைபெற்று, பூதவுடல் தகனக்கிரியைக்காக கோம்பயன்மணல் இந்து மயானத்திற்கு எடுத்துச்செல்லப்படும். இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

**412, K.K.S Road,**
**Jaffna**

**தகவல்:**
**குடும்பத்தினர்**

(CS/57090) J-1

நெஞ்சை விட்டகலாத எம் இதய தெய்வத்தின்

# 19 ஆம் ஆண்டு நினைவலைகள்



அன்னை அரவணைப்பில் 23.02.1951 — ஆண்டவன் அரவணைப்பில் 02.01.2006

**திதி: வளர்பிறை திருதியை (02.01.2025)**

## திருமதி ஜெகதாம்பிகை தெட்சணாமூர்த்தி

ஆலமரமொன்று அடிசாய்ந்ததோ வேரோடி விழுதுகள் விட்ட
- பெருவிருட்சமே.
எமைப்பாரொடு தவிக்கவிட்டு பாதியிலே போனதேனோ!
வானத்து நிலவாய் வந்த அற்புதமே, உமை இப்பிறவியில்
அல்லெப்பிறவியிலும் காணோம் உமைப் போன்ற அருமருந்தை.
எம் உயிரான உயிர்ப்பூவே. உமைச்சிதைத்தவன் யார்?
அவன் காலனேயானாலும் கழுவிலேற்றுவோம்.
பாசத்தின் உறைவிடமே. பண்பின் ஒளி விளக்கே,
உற்றவரும் சுற்றத்தவரும் கூடிக்களித்த உறவுகளை நீர் கைவிட்டுச்
- சென்றதேனோ?
உம் பிரிவால் வாடி நிற்கின்ற உள்ளங்கள் யாவும் தேற்ற மொழியின்றி
தவிக்கின்றதே ! உங்கள் அடிதேடித்துடிக்கின்றதே - என் செய்வோம்
காணாத கண்ணுக்கு கரைந்துபோன கற்பூரமே
எங்கள் வாழ்நாளில் மறவாது வடிக்கின்றோம் கண்ணீரை !!!!

**ஓம் சாந்தி ! சாந்தி !! சாந்தி !!!**

**இல.110, சீனிவாசகம் வீதி,**
**யாழ்ப்பாணம்.**
**077 420 2396**

என்றும் உங்கள் பிரிவால் நினைந்து துயருறும்
**பிள்ளைகள், மருமகள்கள்,**
**பேரப்பிள்ளைகள்.**

(cs 29553) (N-1)

# வீட்டுக்கிருத்திய அழைப்பு



கடந்த 04.12.2024 புதன்கிழமை இறைபதமடைந்த
எமது குடும்பத் தலைவி

## அமரர் இராசலிங்கம் சரஸ்வதி
## (கண்ணம்மா)

அவர்களின் வீட்டுக்கிருத்திய கிரியைகள் நாளை (03.01.2025) வெள்ளிக்கிழமை முற்பகல் 11.00 மணியளவில் அன்னாரின் இல்லத்தில் நடைபெறும். அத்தருணம் தாங்களும் தங்கள் குடும்ப சகிதம் வருகை தந்து அன்னாரின் ஆத்மசாந்திப் பிரார்த்தனையிலும் அதனைத்தொடர்ந்து நடைபெறும் மதியபோசன நிகழ்விலும் கலந்துகொள்ளுமாறு அன்புடன் அழைக்கின்றோம்.

**இந்த அழைப்பை தனிப்பட்ட அழைப்பாக ஏற்றுக்கொள்ளவும்**

**புலவனார் வீதி,**
**கல்வியங்காடு.**

**குடும்பத்தினர்**

(cs 57084) (N-1)

# பட்டாசு விற்பனை அமோகம்

யாழ்ப்பாணம், ஜன.2
பண்டிகைக் காலத்தை முன்னிட்டும், 2025 ஆம் ஆண்டை வரவேற்கும் முகமாகவும் யாழ். நகரிலும், நகரை அண்டிய புற நகரப் பகுதிகளிலும் பட்டாசுகள் வாகனங்களில் வைத்து விற்கப்பட்டன. தென்பகுதியிலிருந்தும் வாகனங்கள் மூலம் வியாபாரிகள் இந்தப் பட்டாசுகளை வீதிகளில் விற்றனர். (ரி-45-17)

# அடையாளம் காட்டி நகையைப் பெறுக!

யாழ்ப்பாணம், ஜன. 2
இலங்கைப் போக்குவரத்துச் சபையின் கோண்டாவில் சாலைக்கும், திருநெல்வேலி அம்மாச்சி உணவகத்துக்கும் இடையில் கடந்த செப்ரெம்பர் 2 ஆம் திகதி தவறவிடப்பட்ட பெறுமதியான தங்க ஆபரணத்தை தகுந்த ஆதாரங்களைக் காட்டிப் பெற்றுக்கொள்ளுமாறு அறிவிக்கப்பட்டுள் ளது.

சமூக ஆர்வலர் ஒருவரால் கண்டெடுக்கப்பட்ட நிலையில் குறித்த நகை கோண்டாவில் கிழக்கு ஶ்ரீ அற்புதநர்த்தன விநாயகர் சனசமூக நிலையம் இணைந்த குமரன் விளையாட்டுக் கழக நிர்வாகத்தினரிடம் ஒப்படைக்கப்பட்டுள்ளது.

உரியவர்கள் தகுந்த ஆதாரங்களைக் காட்டி எதிர்வரும் மார்ச் மாதம்15 ஆம் திகதிக்கு முன்னர் அதனைப் பெற்றுக் கொள்ளுமாறும் மேலதிக விவரங்களுக்கு 0778480615 எனும் தொலைபேசி இலக்கத்துடன் தொடர்பு கொள்ளுமாறும் தெரிவிக்கப்பட்டுள்ளது. (ச-66)

பொலிஸாரின்

# இடமாற்றம் நடைமுறை!

யாழ்ப்பாணம், ஜன. 2
பொலிஸாருக்கான 2025 ஆம் ஆண்டுக்கான வருடாந்த இடமாற்றத்தை நடைமுறைப்படுத்துமாறு பதில் பொலிஸ்மா அதிபர் பிரியந்த வீரசூரியவால் அறிவிக்கப்பட்டுள்ளது.

2025ஆம் ஆண்டுக்கான பொலிஸ் திணைக்களத்தின் வருடாந்த இடமாற்றங்களை நடைமுறைப்படுத்துவதை ஆறு மாதங்களுக்கு இடைநிறுத்துமாறு பதில் பொலிஸ்மா அதிபரால் உத்தரவிடப்பட்டது.

இந்தநிலையிலேயே மீண்டும் வருடாந்த இடமாற்றத்தை நடைமுறைப்படுத்துமாறு மீண்டும் பதில் பொலிஸ்மா அதிபரால் உத்தரவு நேற்றுமுன்தினம் நள்ளிரவு பிறப்பிக்கப்பட்டுள்ளது.

வேறு மாவட்டங்களில், மாகாணங்களில் வேலைசெய்யும் பொலிஸார் மீண்டும் தமது சொந்த மாவட்டங்களுக்கு அல்லது அண்மைய மாவட்டங்களுக்குச் சென்று வேலை செய்ய முடியாத நிலைக்குத் தள்ளப்பட்டு மனஉளைச்சலுக்கு ஆளாகுவதாக அவர்கள் செய்த மேன்முறையீட்டுக்கு அமைவாக இடமாற்றங்கள் நடைமுறைப்படுத்தப்பட்டுள்ளன என்று தெரிவிக்கப்படுகிறது. (ச-27)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தமிழ்மக்கள் கேட்பது அதிகாரப் பங்கீடே!

## பேராசிரியர் ரகுராம் சுட்டிக்காட்டு

கொழும்பு, ஜன. 2

அதிகாரப் பங்கீட்டுக்கும், அதிகாரப் பரவலாக்கத்திற்கும் வித்தியாசமுள்ளது. தமிழ்மக்கள் கேட்பது அதிகாரப் பங்கீடே அதிகாரப் பரவலாக்கம் இல்லை என்று யாழ்ப்பாணப் பல்கலைக்கழக கலைப்பீடாதிபதி பேராசிரியர் சி.ரகுராம் தெரிவித்துள்ளார்.

தமிழ்த்தேசியப் பசுமை இயக்கத்தின் ஏற்பாட்டில் கடந்த ஞாயிற்றுக்கிழமை சமகால அரசியல் உரையரங்கில் அவர் இதனைத் தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவிக்கையில், தமிழ்மக்களின் சுயநிர்ணய உரிமைக் கோரிக்கை முதல் தமிழ்மக்கள் ஆரம்பத்திலிருந்து முன்வைத்துக் கொண்டு வரும் கோரிக்கைகள் யாவும் அதிகாரத்தைப் பங்கீடு செய்வதற்கான கோரிக்கைகளே. அதிகாரத்தைப் பரவலாக்குவதற்கானதல்ல. அதிகாரப் பங்கீட்டுக்கும், அதிகாரப் பரவலாக்கத்துக்கும் வித்தியாசமுள்ளது.

உண்மையில் இலங்கை நாட்டுக்கான ஒரு பொதுவான அரசியல் அமைப்பு என்பதுதான் தற்போது இலங்கை கொண்டிருக்கக் கூடிய அரசியல் கட்டமைப்பில் சாத்தியமானதொன்று.

சமஷ்டி தான் தற்போதும் தமிழ்மக்களின் அரசியல் பிரச்சினைக்கான நிரந்தரத் தீர்வாக அடையாளப்படுத்தப்பட்டுள்ள சூழ்நிலையில் சமஷ்டிப் பண்பைக் கொண்டதான அரசியல் அமைப்பை உருவாக்குவதில் இலங்கை இதுவரை சந்தித்து இருக்கக் கூடிய பிரச்சினைகளை நாங்கள் ஆராய வேண்டிய தேவைப்பாடு இருக்கின்றது - என்றார். (ச-66)


## கரைதுறைப்பற்று பிரதேசசபை, முல்லைத்தீவு

### 2025 ஆம் ஆண்டிற்கான புதிதாக அமைக்கப்பட்ட கடைகளுக்கான (தபால் நிலைய வீதி) நீண்ட கால குத்தகைக்கு வழங்குவதற்கான கேள்வி அறிவித்தல்

கரைதுறைப்பற்று பிரதேச சபையின் அதிகார எல்லைக்குள் காணப்படும் தபால் நிலைய வீதியில் புதிதாக அமைக்கப்பட்ட கடையினை 2025 ஆம் ஆண்டு ஜனவரி மாதம் முதல் நீண்ட கால குத்தகைக்கு வழங்குவதற்கான கேள்விகள் கோரப்படுகின்றன.

கேள்விப்பத்திரம் வழங்கப்படும் திகதி :-01.01.2025 முற்பகல் 9.00 மணி தொடக்கம் 15.01.2025 பி.ப 02.00 மணி வரை (அலுவலக நாட்களில் மட்டும்)

கேள்விகள் ஏற்றுக்கொள்ளப்படும் திகதி :-16.01.2025 மு.ப 10.00 மணி வரை

கேள்விப்பத்திரம் திறந்து பரிசீலிக்கப்படும் திகதி :- 16.01.2025 மு.ப 10.30 மணி

| இல | கடை இலக்கம் | கேள்விப்படிவக் கட்டணம் | மீளளிக்கப்படும் கேள்வி வைப்புப்பணம் ரூபா | கடைக்குரிய மாதாந்த வாடகைத் தொகை ரூபா | ஏற்றுக்கொள்ளக் கூடிய ஆகக்குறைந்த கேள்வித் தொகை (VAT,NB) நீங்கலாக |
|---|---|---|---|---|---|
| | முல்லைத்தீவு உப அலுவலகம் | | | | |
| 1 | கடை இல - 01 | 2,000.00 | 79,200.00 | 11,000.00 | **2,640,000.00** |
| 2 | இரண்டு கடைகள் இல - 02 | 2,000.00 | 158,400.00 | 22,000.00 | **5,280,000.00** |
| 3 | கடை இல - 03 | 2,000.00 | 79,200.00 | 11,000.00 | **2,640,000.00** |
| 4 | கடை இல - 04 | 2,000.00 | 79,200.00 | 11,000.00 | **2,640,000.00** |
| 5 | கடை இல - 05 | 2,000.00 | 79,200.00 | 11,000.00 | **2,640,000.00** |
| 6 | இரண்டு கடைகள் இல - 06 | 2,000.00 | 158,400.00 | 22,000.00 | **5,280,000.00** |
| 7 | கடை இல - 07 | 2,000.00 | 79,200.00 | 11,000.00 | **2,640,000.00** |
| 8 | கடை இல - 08 | 2,000.00 | 79,200.00 | 11,000.00 | **2,640,000.00** |
| 9 | கடை இல - 09 | 2,000.00 | 79,200.00 | 11,000.00 | **2,640,000.00** |

**நிபந்தனைகள்:**

1. விண்ணப்பதாரி இலங்கை பிரஜையாக இருப்பதுடன் கரைதுறைப்பற்று பிரதேச சபையின் எல்லைக்குள் நிரந்தரமாக வசிப்பவராகவும் இருத்தல் வேண்டும்.
2. கேள்விப்பத்திரத்தினை இரு பிரதிகளில் தயாரித்து மூலப்பிரதியை செயலாளர், கரைதுறைப்பற்று பிரதேசசபை, முல்லைத்தீவு. என்னும் முகவரிக்கு முத்திரை இட்டு தபாலுறையின் இடது பக்க மேல் மூலையில் தபால் நிலைய வீதியில் அமைந்துள்ள புதிய கடை இல....... என கேள்வியின் பெயர் தெளிவாக எழுதப்பட்டு பதிவுத்தபால் மூலம் 16.01.2025 முற்பகல் 10 மணிக்கு முன் கிடைக்கக் கூடியவாறு அனுப்புதல் வேண்டும். அல்லது இதற்கென கரைதுறைப்பற்று பிரதேசசபை தலைமை அலுவலகத்தில் வைக்கப்பட்டுள்ள கேள்விப் பெட்டியில் உரிய நேரத்திற்கு முன் இடப்பட வேண்டும்.கேள்வி நேரத்தின் பின்னர் கிடைக்கும் படிவங்கள் நிராகரிக்கப்படும்.
3. கேள்விப்பத்திரங்களை பெற விரும்புபவர்கள் கிராமசேவையாளரினால் வழங்கப்பட்ட வதிவிடச்சான்றிதழ் மற்றும் தேசிய அடையாள அட்டைப் பிரதியுடன் கரைதுறைப்பற்று பிரதேசசபையின் தலைமை அலுவலகத்திற்கு சமுகமளிக்க வேண்டும்.
4. உள்ளூராட்சி மன்றங்களினால் தவறுநராக கணிக்கப்பட்ட எவருக்கும் கேள்விப்பத்திரங்கள் வழங்கப்படமாட்டாது எனினும் தவறுதலாக வழங்கப்பட்டிருப்பின் அது நிராகரிக்கப்படுவதுடன் இது தொடர்பான வைப்புக்கள் எதுவும் மீளளிக்கப்படமாட்டாது.
5. குறித்த கடையின் ஒப்பந்ததாரர்கள் எந்த வகையிலும் உப வாடகைக்கு வழங்கவோ உரிமை மாற்றம் செய்யவோ முடியாது.
6. நீண்ட கால குத்தகை கடைகளுக்கு மாதாந்த கடை வாடகையாக பிரதேச சபையினால் காலத்திற்கு காலம் தீர்மானிக்கப்படும் தொகையினை செலுத்தப்படல் வேண்டும்.
7. கேள்வி நிபந்தனைகள், அறிவுறுத்தல்களிற்கு அமையாத கேள்விக் கோரிக்கைகளை நிராகரிக்கவும் எந்தவொரு கேள்வி தொடர்பிலும் இறுதி முடிவெடுக்கவும் கேள்விச்சபைக்கே பூரண அதிகாரமுண்டு.
8. அதிகூடிய கேள்வித்தொகை கூறும் கேள்விதாரருக்கு சபையுடனான ஒப்பந்தம் கைச்சாத்திடப்பட வேண்டும். தவறும் பட்சத்தில் மீள் கேள்வி அறிவித்தல் செய்யப்படும். ஏற்றுக்கொள்ளக்கூடிய குறைந்த கேள்வித் தொகையிலும் குறைவான கேள்வி கோருபவர்களின் கேள்வி வைப்பு பணம் மீளளிக்கப்படமாட்டாது.
9. தெரிவு செய்யப்பட்ட கேள்விதாரர் அறிவித்தல் செய்யப்பட்ட திகதியிலிருந்து 07 நாட்களுக்குள் ஒரே தடவையில் கேள்வித் தொகையின் முழுத் தொகையையும் பி.ப 2.30 மணிக்கு முன்னர் செலுத்தி சபையுடன் ஒப்பந்த உடன்படிக்கை பூர்த்தி செய்தல் வேண்டும்.
10. சபையின் அனுமதியின்றி எதுவித திருத்த வேலைகள்.மாற்றங்கள்,புனரமைப்பு வேலைகளும் மேற்கொள்ள முடியாது.
11. தங்களால் நடத்த உத்தேசிக்கப்படும் வியாபாரத்தின் தன்மை சபையால் பரிசீலிக்கப்பட்ட பின்னரே அனுமதி வழங்கப்படும்.
12. மேற்குறிப்பிட்ட நிபந்தனைகளின் பிரகாரம் நடக்க தவறுமிடத்து குத்தகை ஒப்பந்தம் இரத்து செய்யப்பட்டு செலுத்தப்பட்ட பணத்தொகைகள் மீளளிப்பு செய்யப்படமாட்டாது என்பதுடன் அவர்களது பெயர் தவறுநர் பட்டியலில் அட்டவணைப்படுத்தப்படும்.
13. சபையின் செயலாளரின் இந்த ஒப்பந்தம் தொடர்பாக எதுவித முடிவையும் ஏற்க வேண்டும். இது தொடர்பாக செயலாளருக்கு எதிராக நீதிமன்றம் மூலம் நடவடிக்கை எடுக்க முடியாது.
14. கேள்வி சம்பந்தமாக மேலதிக விபரங்களை பிரதேசசபையின் தலைமை அலுவலகத்தில் அலுவலக நேரத்தில் பெற்றுக்கொள்ளலாம்.

**செயலாளர்,**
**கரைதுறைப்பற்று பிரதேச சபை,**
**முல்லைத்தீவு.**

2024.12.31

குறிப்பு :- நேற்றைய உதயன் பத்திரிகையில் 06ம் பக்கத்தில் வெளியான கரைதுறைப்பற்று பிரதேச சபையின் குறித்த விளம்பரம் தொழில் நுட்பக் கோளாறு காரணமாக தவறுதலாக பிரசுரமாகிவிட்டது. சரியான விளம்பரம் இங்கு பிரசுரிக்கப்பட்டுள்ளது.

(CR/44020)


## கஞ்சாவுடன் கைது

### சந்தேகநபருக்கு மறியல்

யாழ்ப்பாணம், ஜன. 2

வட்டுக்கோட்டை பொலிஸ் பிரிவுக் குட்பட்ட பொன்னாலைப் பகுதியில் கஞ்சாவுடன் கைதுசெய்யப்பட்ட இளைஞர் விளக்கமறியலில் வைக்கப்பட்டுள்ளார்.

21 வயதுடைய குறித்த இளைஞன் கடந்த திங்கட்கிழமை 5 கிராம் கஞ்சாவுடன் வட்டுக்கோட்டை பொலிஸா ரால் கைதுசெய்யப்பட்டார். அவரை நேற்று முன்தினம் மல்லாகம் நீதிமன்றத்தில் முற்படுத்தியவேளை, விளக்கமறியலில் வைக்குமாறு நீதிவான் உத்தரவிட்டார். (ச-27)

## வீட்டுக்கு மேல் விழுந்த வேம்பு!

யாழ்ப்பாணம், ஜன. 2

சங்கானைப் பிரதேச செயலர் பிரிவுக்குட்பட்ட வீடொன்றின்மீது நேற்றுமுன்தினம் செவ்வாய்க்கிழமை வேப்பமரம் முறிந்து விழுந்ததால் வீடு பகுதியளவில் சேதமடைந்துள்ளதாக யாழ்ப்பாணம் மாவட்ட அனர்த்த முகாமைத்துவப் பிரிவின் பிரதிப் பணிப்பாளர் ரி.என்.சூரியராஜா தெரிவித்துள்ளார். மழையுடன் வீசிய காற்றுக் காரணமாகவே குறித்த அனர்த்தம் இடம்பெற்றுள்ளது. (ச-33-27,125)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## அநுர...

தெரிவித்துள்ளது. மொட்டுக் கட்சி தலைமையகத்தில் நேற்று நடைபெற்ற ஊடகச் சந்திப்பில் அந்தக் கட்சியின் நாடாளுமன்ற முன்னாள் உறுப்பினரான சஞ்சீவ எதிரிமான்ன மேற்கண்டவாறு தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவித்துள்ளதாவது:-

"இந்த அரசாங்கம் வழங்கிய வாக்குறுதிகளுக்கும், செய்கின்ற செயலுக்கும் இடையில் பெரிய வித்தியாசங்கள் காணப்படுகின்றன. அதை மக்களும் தற்போது புரிந்துகொண்டுள்ளனர்.


தங்களது பாரம்பரியக் கட்சிகளையெல்லாம் விட்டுவிட்டுத்தான் இந்த அரசாங்கத்துக்கு வடக்கு, கிழக்கு, மலையகம், தெற்கு என அனைத்துப் பகுதி மக்களும் ஆதரவு வழங்கினார்கள். ஆனால் தற்போது அரசாங்கம் மீதான மக்களின் நம்பிக்கை குறைந்துவருவதை அவதானிக்க முடிகின்றது.

2015ஆம் ஆண்டு பின்னடைவைச் சந்தித்து 2018ஆம் ஆண்டில் மீண்டெழுந்ததுபோல ஸ்ரீலங்கா பொதுஜன பெரமுனக் கட்சி மீண்டெழும். அதற்கேற்ற வகையில் கட்சி கட்டியெழுப்பப்படும்" - என்றார். (அ-எ-44)

## அடுத்தவாரம்...

இந்தத் தாழமுக்க நிலைமை வடக்கு, வடமேற்குத் திசைநோக்கி நகரும் வாய்ப்புள்ளது என்றும் வடக்கு மற்றும் கிழக்கு மாகாணங்களின் கரையோரங்களை அண்மித்து நகர வாய்ப்புள்ளது எனவும் யாழ்ப்பாணம் பல்கலைக்கழகப் புவியியல்துறைத் தலைவரும், வானிலையாளருமான நா.பிரதீபராஜா தெரிவித்துள்ளார். (அ-எ-66)


## கண்ணீர் அஞ்சலி



சைவபரிபாலன சபையின் ஆயுள்கால உறுப்பினரும், உப தலைவருமாகிய

**திரு செல்லையா ஜெயபாலசிங்கம்**


அவர்களின் பிரிவால் துயருற்றிருக்கும் குடும்பத்தினருக்கு எமது ஆழ்ந்த அனுதாபங்களை தெரிவித்துக் கொள்கின்றோம்.

நிர்வாகம்
சைவபரிபாலன சபை
இல. 66 கல்லூரி வீதி,
நீராவியடி, யாழ்ப்பாணம்.

(CS 29561)V-1

ஓம் விராட் விஸ்வப்பிரம்மனே நமஹ

## 1ஆம் ஆண்டு நினைவஞ்சலி



அமரர்
**வினாசித்தம்பி சந்திரசேகரம்**
(வேல்சன்ஸ் வேர்க் சொப் உரிமையாளர்)

திதி -மார்கழி மாத அமாவாசை திருதியை

ஆண்டு ஒன்று ஆனதுவோ
உங்கள் முகம் கண்டு
ஆறவில்லை நம் இதயம்
அன்பும் பாசமும் நிறைந்த
பொக்கிஷம் நீங்கள்
நித்தம் புலம்புகின்றோம்
உங்கள் திருமுகம் காணாமல்
ஆறவில்லை எங்கள் துயர்
உங்கள் ஆத்மா சந்தியடையப்
பிரார்த்திக்கின்றோம்.

தோற்றம் 01.10.1948
மறைவு 13.01.2024

70, பத்திரகாளி கோவிலடி,
வண்ணார் பண்ணை,
யாழ்ப்பாணம்.

குடும்பத்தினர்
075 760 9172

(CS/29563) J-1

## நெஞ்சை விட்டு அகலாத பதினாறாவது ஆண்டு நிறைவில் பாதம் வணங்கி நிற்கின்றோம்.



**திருமதி இந்திராணி கதிர்காமத்தம்பி**
மார்கழி வளர்பிறை திருதியை (02.01.2025)

இனிய புன்சிரிப்புடன் வந்தாரை வரவேற்று
இன்முகங்காட்டி நிற்கும் எங்கள் அன்புத் தெய்வமே
இல்லறத்தின் தெய்வமாய் திகழ்ந்த
நீங்கள் எம்மை விட்டுப் பிரிந்து பதினாறு ஆண்டுகள் போயிற்றே
இறைவன் பாதங்களில் அர்ச்சிக்கப்பட்ட மலராய்
உங்கள் ஆத்மா சாந்தியடைய பிரார்த்திக்கின்றோம்.

அம்மன் கோயில் வீதி,
கோண்டாவில்.

குடும்பத்தினர்.

(CS/57077) J-1


# யாழ்.நகரப் பகுதியில் இளைஞன் மீது தாக்குதல்



யாழ்ப்பாணம் நகரப் பகுதியில் நேற்று முன்தினம் இரவு இளைஞர் ஒருவரை கும்பல் ஒன்று கண்மூடித்தனமாகத் தாக்கும் காணொலிக் காட்சி வெளியாகியுள்ள நிலையில் அதுதொடர்பில் விசாரணைகள் ஆரம்பிக்கப்பட்டுள்ளன.

நேற்றுமுன்தினம் இரவு யாழ்ப்பாணம் தனியார் பஸ் தரிப்பு நிலையத்தில் கும்பல் ஒன்று அட்டகாசம் புரிந்துள்ளது. அந்தக் கும்பல் முச்சக்கரவண்டியின் ஒரு சக்கரத்தைத் தூக்கி ஆபத்தான முறையில் முச்சக்கர வண்டியைச் செலுத்தி அங்கிருந்தவர்களை அச்சுறுத்தும் வகையில் நடந்துள்ளது. பின்னர் இளைஞர் ஒருவர் மீது தலைக்கவசம், கையிலிருந்த பொருள்கள் என்பவற்றைப் பயன்படுத்திக் கண்மூடித்தனமாகத் தாக்கியுள்ளது. இதனால் அந்தப் பகுதியில் பதற்றம் ஏற்பட்டதுடன், அங்கிருந்த பொதுமக்கள் பெரும் அச்சமடைந்தனர்.

இந்தச் சம்பவம் தொடர்பாக வடக்கு மாகாண ஆளுநர் மற்றும் வடக்கு மாகாண சிரேஷ்ட பொலிஸ்மா அதிபர் ஆகியோரின் கவனத்துக்குக் கொண்டு செல்லப்பட்டுள்ளது. இந்தச் சம்பவம் தொடர்பான விசாரணைகள் ஆரம்பிக்கப்பட்டுள்ளன என்று பொலிஸார் தெரிவித்தனர். (எ-27)


## ஆதனப் பெயர்மாற்றம் தொடர்பான அறிவித்தல்

வலிகாமம் தெற்கு பிரதேச சபை
உப அலுவலகம், சுன்னாகம்.
வட்டாரம்-06, களவியாவத்தை வீதி, ஆதன இல-42/6

வலிகாமம் தெற்கு பிரதேச சபையின் சுன்னாகம் உப அலுவலகத்திற்குட்பட்ட களவியாவத்தை வீதி, சுன்னாகம் எனும் முகவரியில் அமைந்துள்ள ஆதனமானது எமது ஆதனப் பதிவேட்டில் வட்டாரம்-06, களவியாவத்தை வீதி, ஆதன இல:42/6ல் Mrs.அன்னம்மா cld by Mrs.S.செல்லமுத்து எனும் பெயரில் உள்ளது.

பிரசித்த நொத்தாரிசு **இராசேந்திரன் வசந்தசேனன்** முகதாவில் வடமாகாணம் யாழ்ப்பாணம் மாவட்டம் வலிகாமம் வடக்குப்பகுதி உடுவில் கோவிற்பற்று உடுவில் இறை, வலிகாமம் தெற்கு பிரதேசசெயலர் பிரிவு, J/185 கிராமசேவகர் பிரிவில் அமைந்துள்ள **"பறையன்காடு"** எனக்குறிப்பிடப்பட்டுள்ள நிலப்பரப்பு 07 குளி 0.41 உடைய ஆதனமானது 2004.02.07 ஆம் திகதிய 5921 ஆம் இலக்க உறுதி மூலம் வெளிப்படுத்தல் செய்யப்பட்டுள்ளது.

இவ் ஆதனம் தொடர்பில் பிரசித்த நொத்தாரிசு இராசேந்திரன் வசந்தசேனன் அவர்கள் மூலம் 2004.02.07ஆம் திகதிய 5922 ஆம் இலக்க அறுதி உறுதியால், டச் றோட், உடுவில், சுன்னாகம் என்னும் இடத்தை சேர்ந்த இரத்தினம் ஞானசூரியன் (650652053V) பெண் கலைவாணி (758573087V) எனும் பெயரிற்குப் பெயர்மாற்றம் செய்வதற்காக விண்ணப்பிக்கப்பட்டுள்ளது.

மேலும் உத்தரவு பெற்ற நில அளவையாளர் B.பிரணவன் அவர்களால் 2024.05.21 இல் அளந்து தயாரிக்கப்பட்ட 2173 ஆம் இலக்க வரைபடத்தில் துண்டு 1 ஆகிய நிலப்பரப்பு 06 குளி 15.95 ஆகும்.

அதன் எல்லைகளாக,

**கிழக்கு-ஒழுங்கை**
**வடக்கு-தேவதாசன் பெண் கலைவாணியின் ஆதனம்**
**மேற்கு-கைஒழுங்கை**
**தெற்கு- தில்லைநடேசன் பெண் புஸ்பவதியின் ஆதனம்**

எனவே இப்பெயர்மாற்றம் தொடர்பாக ஏதாவது ஆட்சேபனை தெரிவிப்பவர்கள் அல்லது உரிமை கோருபவர்கள் எவராவது இருந்தால் இன்றிலிருந்து 30 நாட்களுக்குள் எழுத்து மூலம் அறியத்தருமாறும் அவ்வாறு எவரும் ஆட்சேபனை தெரிவிக்கவோ உரிமைகோரவோ இல்லையெனின் குறித்த ஆதனமானது இரத்தினம் ஞானசூரியன் பெண் கலைவாணி எனும் பெயரிற்கு பெயர்மாற்றம் செய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்படும் என்பதை அறியத்தருகின்றேன்.

மேலும் இப்பெயர் மாற்றத்தால் ஏற்படக்கூடிய எவ்விளைவுகளிற்கும் வலிகாமம் தெற்கு பிரதேச சபை பொறுப்பாளி அல்ல என்பதைத் தெரிவித்துக் கொள்கின்றேன்.

02.01.2025

செயலாளர்
வலிகாமம் தெற்கு பிரதேச சபை.
சுன்னாகம்.

(CS 29560) V-1


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# மணிவிழா

யாழ்ப்பாணம், ஜன.2

சாவகச்சேரி ஆதார மருத்துவமனையில் விடுதி முகாமையாளராகப் பணிபுரிந்து ஓய்வு பெற்ற வைத்திலிங்கம் ஜெகதாசனின் மணி விழா நிகழ்வு ஆதார மருத்துவமனையின் மருத்துவ அதிகாரி மருத்துவர் ரஜீவ் தலைமையில் மருத்துவமனை மண்டபத்தில் அண்மையில் நடைபெற்றது.

நிகழ்வில் மருத்துவர்கள், தாதிய உத்தியோகத்தர்கள், பணியாளர்கள், நிர்வாக உத்தியோகத்தர்கள் எனப்பலரும் கலந்துகொண்டனர். (ரி-45-131)



சீன நாட்டு அரசாங்கத்தின் உதவியுடன் மட்டக்களப்பில் வெள்ளத்தினால் பாதிப்புற்ற மக்களுக்கு நிவாரணப் பொருள்கள் வழங்கும் நிகழ்வு மாவட்டச் செயலர் ஜே.ஜே.முரளிதரன் தலைமையில் மட்டக்களப்பு மாவட்டச் செயலகத்தில் கடந்த ஞாயிற்றுக்கிழமை நடைபெற்றது.

நிகழ்வில் பிரதம அதிதியாக சீனாவின் இலங்கைக்கான தூதுவர் குயி சிகங் ஹொங் கலந்துகொண்டு நிவாரணப்பொருள்களை வழங்கிவைத்தார். (ச-22,27)

## பல்கலை...


வவுனியாவைச் சேர்ந்த சந்திரபோஸ் சசிகாந் (வயது-23) என்ற கொழும்பு பல்கலைக்கழக இறுதியாண்டு மாணவரே இவ்வாறு உயிரிழந்துள்ளார். கடந்த 25ஆம் திகதி நண்பரின் வீடொன்றுக்கு மோட்டார் சைக்கிளில் பயணித்தபோது, நிறுத்தப்பட்டிருந்த கார் ஒன்றுடன் மோதி இவர் விபத்துக்குள்ளாகியிருந்தார். இறப்பு விசாரணைகள் யாழ்ப்பாணம் போதனா மருத்துவமனையின் திடீர் இறப்பு விசாரணை அதிகாரி ந. பிரேம்குமாரால் நேற்று முன்னெடுக்கப்பட்டன. (அ-எ-26)

## உறக்கத்துக்கு...

உயிரிழந்துள்ளார். நேற்றுக்காலை உணவு அருந்தி விட்டுச் சென்ற இவர் உறக்கத்திலேயே உயிரிழந்துள்ளார்.

இறப்பு விசாரணைகளை யாழ்ப்பாணம் போதனா மருத்துவமனை திடீர் இறப்பு விசாரணை அதிகாரி ந.பிரேம்குமார் மேற்கொண்டார். (அ-எ-26)

பெண் வன்முறைகளுக்கு எதிரான சர்வதேச தினத்தையொட்டி பெண்களின் உலகளாவிய மத்திய நிலையத்தின் அனுசரணையில் கிளிநொச்சி உளநல சங்கத்தால் 'சமத்துவ சங்கிலி' எனும் வீதி நாடகம் 14 பிரதேச செயலகங்கள் ரீதியிலும், மாவட்ட மட்டத்திலும் ஆற்றுகை செய்யப்பட்டது. (ச-25)







# அரசியல் உரையரங்கு

யாழ்ப்பாணம், ஜன.2

தமிழ்த்தேசியப் பசுமை இயக்கத்தின் ஏற்பாட்டில் சமகால அரசியல் தொடர்பான உரையரங்கு ஆவரங்கால் கூட்டுறவு மண்டபத்தில் கடந்த ஞாயிற்றுக்கிழமை நடைபெற்றது.


நிகழ்வில் யாழ். பல்கலைக்கழகத்தின் சட்டத்துறை சிரேஷ்ட விரிவுரையாளர் திருமதி கோசலை மதன் 'தமிழ்மக்களும் புதிய அரசியலமைப்பும்' எனும் தலைப்பிலும், யாழ். பல்கலைக்கழகக் கலைப்பீடப் பேராசிரியர் சி.ரகுராம் 'தமிழ்மக்களும் முறைமை மாற்றமும்' எனும் தலைப்பிலும் உரையாற்றினர். (ரி-45-66)

# முயற்சியாளர்கள் கௌரவிப்பு நிகழ்வு

யாழ்ப்பாணம், ஜன.2

தேசிய ரீதியில் சிறந்த கைத்தொழில் முயற்சியாளராகத் தெரிவுசெய்யப்பட்டோருக்கான கௌரவிப்பு நிகழ்வு கைத்தொழில் அபிவிருத்திச் சபையின் மாகாணப் பணிப்பாளர் சி. சிவகெங்காதரன் தலைமையில் யாழ்.மாவட்டச் செயலகக் கேட்போர் கூடத்தில் கடந்த திங்கட்கிழமை மு.ப. 10 மணிக்கு இடம்பெற்றது. இந்த நிகழ்வில் யாழ்.மாவட்டப் பதில் செயலர் மருதலிங்கம் பிரதீபன் பிரதம விருந்தினராகப் பங்கேற்றார். (ரி-66-9)





# மக்கள் குறைகேள் சந்திப்பு

முல்லைத்தீவு, ஜன.2

முல்லைத்தீவு, மாமூலைப் பகுதியில் வன்னிமாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் துரைராசா ரவிகரன் மக்கள் குறைகேள் சந்திப்பொன்றை நடத்தினார்.

சந்திப்பில், மாமூலைக் கிராமத்தில் வனவளத்திணைக்களத்தால் ஆக்கிரமிக்கப்பட்டுள்ள மக்களின் காணிகளை விடுவித்தல், உள்ளக வீதிகளைச் சீரமைத்தல், கிராம அபிவிருத்திச் சங்க கட்டடச் சீரமைப்பு உள்ளிட்ட கோரிக்கைகள் அடங்கிய மகஜரொன்று கிராம மக்களால் நாடாளுமன்ற உறுப்பினரிடம் கையளிக்கப்பட்டது. (ச-45-246)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## பொருளாதார...

ஜனாதிபதி செயலகத்தில் நேற்று நடைபெற்ற 'தூய இலங்கை' தேசிய வேலைத்திட்டத்தின் ஆரம்ப நிகழ்வில் உரையாற்றும்போதே ஜனாதிபதி இவ்வாறு தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவித்துள்ளதாவது:-

"இந்தப் புத்தாண்டுடன் எமது நாட்டை புதிய மாற்றத்துக்கு உட்படுத்தும் நிரந்தரமான நோக்கம் எமக்கு உள்ளது. அதற்கான கடமையும் பொறுப்பும் எம்மைச் சார்ந்திருக்கிறது. நானும் எனது அமைச்சர்களும் பிரதி அமைச்சர்களும் அனைத்து அரசியல் தரப்புகளும் இதற்கான அர்ப்பணிப்பைச் செய்வோம்.

அரசியல் கலாசாரம், வீண் விரயம், குடும்ப வாரிசுகள், எல்லையை மீறி அதிகாரத்தைப் பயன்படுத்தல், அதிகாரத்தை மக்களுக்கு எதிராகப் பயன்படுத்தல், மக்களுக்கு மேலாக இருக்கும் அரசியல்வாதிகளாக இருத்தல் என்ற அனைத்தையும் இல்லாமல் செய்து, மக்களின் அபிலாஷைகளைப் பூர்த்தி செய்யக்கூடிய ஒரு புதிய அரசியல் கலாசாரத்தை நாம் ஆரம்பித்திருக்கின்றோம். புதிய வருடத்தின் சவால்களுக்கு ஈடுகொடுக்கக்கூடிய திட்டங்களை நாம் வகுத்திருக்கின்றோம்.

கடந்த காலங்களில் எமது பொருளாதாரம் வங்குரோத்து நிலையில் காணப்பட்டது. தற்போது பொருளாதாரத்தை மேலோட்டமாகப் பார்க்கும் போது நிலைபேறான தன்மையை உருவாக்கியிருக்கிறோம். கடந்த வருடத்தின் நடுப்பகுதியில் வங்குரோத்து நிலையிலிருந்து மீள்வதற்கான வாய்ப்பு நமக்குக் கிடைத்திருந்தது. அது போதுமானதல்ல. பொருளாதாரத்தில் ஏற்பட்டிருக்கும் பிரச்சினைகள் புதியவையாக அமைந்துள்ளன. அவற்றைத் தீர்ப்பதற்கான அரசியல் வேலைத்திட்டத்தை நாம் ஆரம்பித்திருக்கிறோம்.

நாட்டுக்குள் சட்டத்தின் ஆட்சியை நிலைநாட்டுவதற்கான பலமான வேலைத்திட்டம் எமக்கு இருக்கிறது. எமது நாட்டில் நீண்ட காலமாகச் சட்டத்தின் ஆதிக்கம் கருத்தில்கொள்ளப்படாத நிலைமை காணப்பட்டது. பிரதானமாக குற்றவாளிகளும் மோசடிக்காரர்களும் சட்டத்துக்கு மேலாக இருக்கும் வகையில் அரசியல் துறை இருந்தது. தனக்கு தேவையான மற்றும் தாம் நினைத்தவாறு சட்டத்தை மீறிச் செல்லும் நிலைமை காணப்பட்டது. நாம் சட்டத்தின் ஆட்சியை உறுதிப்படுத்தப் பெரும் முயற்சிகளை மேற்கொள்கிறோம்.

எமது நாட்டின் அரச கட்டமைப்பு, அரசியல் கட்டமைப்பு மற்றும் முழு சமூகத்துக்குள்ளும் ஊழல் மோசடி, வீண் விரயம் என்பன பரவியுள்ளன. ஊழல் மோசடியை நிறுத்த நாம் பெரும் முயற்சிகளை எடுக்க வேண்டியுள்ளது. அதற்குள் எமது நாட்டின் சட்டமா அதிபர் திணைக்களத்துக்குப் பெரும்பணி உள்ளது. தேவையான ஒத்துழைப்பை சட்டமா அதிபர் திணைக்களம் வழங்கும் என நம்புகிறேன்.

குற்றப்புலனாய்வுத் திணைக்களம், நீதிமன்றக் கட்டமைப்பு என்பன மீண்டும் எமது நாட்டை ஊழல், மோசடி அற்றதாக மாற்றும் பணிக்காக தம்மை அர்ப்பணிக்கும் என்று நம்புகிறோம். அரசியல் அதிகாரத் தரப்பு என்ற வகையில் செயற்பாடுகள் வாயிலாக ஊழலை தடுக்கவும் மோசடியை தடுக்கவும் நாம் முன்மாதிரியாகச் செயற்படுவோம். ஆனால் அரசியல் தரப்பின் முன்னுதாரணமும் தலையீடும் மாத்திரம் போதுமானதல்ல. அதற்கான அரச நிறுவனங்கள் தம்மீதான பொறுப்புகளைச் சரியாக புரிந்துகொண்டு அந்த மாற்றத்திற்குத் தேவையான உதவி, ஒத்துழைப்புகளை எமக்கு வழங்கவேண்டும் என்று கோருகின்றேன்.

எந்தவொரு வலுவான வேலைத்திட்டத்தை ஆரம்பிக்கவும், வலுவான அடித்தளம் அவசியமாகும். எமது நாடும் தேசமும் அத்திபாரம் இழந்த நாடாகும். அடிப்படை இழந்த நாடாகும். நாம் மிகத் துரிதமாக திட்டமிடலின் அடிப்படையில் இந்த அத்திபாரத்தை கட்டியெழுப்பிக் கொண்டிருக்கிறோம்.

பொருளாதாரம் மிகச் சிறிய குழுவின் மீது குவிந்திருப்பது சமூகத்துக்குள் ஒருபோதும் ஸ்திரத்தன்மையைக் கொண்டுவராது. பொருளாதாரம் ஒரு சிறிய குழுவிடம் குவிந்திருப்பது நாட்டிலும் மக்களிடமும் நிலையற்ற தன்மையை உருவாக்கும்.

பொருளாதாரத்தில் ஸ்திரத்தன்மை உருவாக வேண்டுமெனில் பொருளாதாரத்தின் பலன்கள் கிராமிய மக்கள் வரையில் சென்றடைய வேண்டும்.

எதிர்வரும் வரவு - செலவுத் திட்டத்தை நமது நாட்டில் வறுமை ஒழிப்பை நோக்கமாகக் கொண்ட திசையை நோக்கி நகர்த்தும் ஒரு பொருளாதார வேலைத்திட்டத்தின் ஆரம்பமாக மாற்றுவதற்கு நாங்கள் தயாராக உள்ளோம். எமது இரண்டாவது இலக்கு இந்த நாட்டை டிஜிற்றல் மயமாக்குவதாகும். செயற்றிறனற்ற வீண் விரயத்தைக் குறைக்கவும் ஊழல், மோசடியை கட்டுப்படுத்தவும் பிரஜைகளுக்கு மிக இலகுவாக அரசாங்கத்துடன் இருக்கின்ற தொடர்பை தொடர்ச்சியாக பேணிக்கொள்ளவும் தேவையான அடித்தளத்தை டிஜிற்றல் மயமாக்கல் உருவாக்கும்" - என்றார். (அ-எ-இ)

## 'ஈடிரபிக்'...

கள் தொடர்பாக எளிதில் பொதுமக்கள் முறைப்பாடு அளிப்பதற்கு ஏதுவாக 'ஈடிரபிக்' (ETraffic) என்ற செயலி அறிமுகப்படுத்தப்பட்டுள்ளது.

இந்தச் செயலியின் உத்தியோகபூர்வ வெளியீட்டு நிகழ்வு பதில் பொலிஸ்மா அதிபர் பிரியந்த வீரசூரிய தலைமையில் நடைபெற்றுள்ளது.

ஒளிப்படங்கள், காணொலிகள் மற்றும் விரிவான தகவல்களை சட்ட நடைமுறைக்காக நேரடியாகப் பதிவேற்றவும், முறைப்பாடளிக்கும் செயல்முறையை நெறிப்படுத்தவும், பொதுப் பாதுகாப்பை மேம்படுத்தவும் இந்தச் செயலி பொதுமக்களுக்கு உதவும் என்று தெரிவிக்கப்பட்டுள்ளது. (அ-எ-இ)

## 'தூய இலங்கை'...

அரச துறை மற்றும் தனியார் துறையினரால் முன்னெடுக்கப்படும் இந்த வேலைத்திட்டத்தின் ஆரம்ப நிகழ்வுகளை அனைத்து அரசு மற்றும் தனியார் இலத்திரனியல் அலைவரிசைகள் ஊடாக ஒளிபரப்புவதற்கும் ஏற்பாடுகள் செய்யப்பட்டிருந்தன.

இந்த வேலைத்திட்டத்தை நடைமுறைப்படுத்துவதற்காக ஜனாதிபதியின் செயலாளர் என்.எஸ்.குமாநாயக்க, பதில் பொலிஸ்மா அதிபர் மற்றும் முப்படைகளின் தளபதிகள் உட்பட 18 பேர் கொண்ட ஜனாதிபதி செயலணி ஒன்று அண்மையில் உருவாக்கப்பட்டுள்ளது.

'தூய இலங்கை' திட்டத்தைத் திட்டமிடல், வழிகாட்டுதல், நடைமுறைப்படுத்துதல், முன்னேற்றத்தை மீளாய்வு செய்தல் மற்றும் குறிப்பிட்ட கால எல்லைக்குள் நிறைவு செய்தல் என்பன இந்த ஜனாதிபதி செயலணியின் பொறுப்புகள் எனக் குறிப்பிடப்பட்டுள்ளது.

இந்தத் தேசிய வேலைத்திட்டம் இலங்கையின் சுற்றுச்சூழல் மற்றும் சமூக ஆரோக்கியத்தை மேம்படுத்தும் முயற்சி என்று கருதப்படுகின்றது. (அ-எ-இ)

## பஸ்...

இது தொடர்பில் அவர் மேலும் தெரிவித்துள்ளதாவது:-

"புதிய அரசாங்கம் பதவியேற்ற பின்னர் எரிபொருள் விலை குறையும் என்று பொதுமக்கள் எதிர்பார்த்துள்ளனர். புத்தாண்டின் தொடக்கத்தில் எரிபொருள் விலை குறையும் என்று எதிர்பார்த்திருந்தோம். ஆனால் அந்த நம்பிக்கை இப்போது கனவாக மாறியுள்ளது.

பஸ் கட்டணம் குறைக்கப்பட வேண்டுமானால் கொள்கைக் கணக்கீட்டின்படி டீசல் லீற்றர் ஒன்றின் விலையை 30 ரூபாவால் குறைக்க வேண்டும். அதேநேரம் உதிரிப்பாகங்கள் மற்றும் இதர உபகரணங்களின் விலைகளும் குறையவேண்டும்.

தனியார் பஸ் சேவை தற்போது நெருக்கடி மிக்க நிலையில் உள்ளது. அதனால் இந்த ஆண்டு ஜுலை மாதத்துக்குப் பின்னர் செலவுகளை நிர்வகிக்க பஸ் கட்டணங்களைக் கணிசமாக உயர்த்த வேண்டி ஏற்படும்.

சாதாரண புதிய பஸ் ஒன்றின் விலை 16 மில்லியன் ரூபாவாக அதிகரித்துள்ளது. அதன் பராமரிப்புச் செலவுகளும் அதிகரித்துள்ளன. இந்தநிலைமை தவிர்க்க முடியாத கட்டண உயர்வுக்கு வழிவகுக்கும்" - என்றார். (அ-எ-இ)

## அரசாங்கத்தை...

படைகளின் பிரதானியுமான ஜெனரல் சவேந்திரசில்வா நேற்று இராணுவத்தில் இருந்து ஓய்வுபெற்றார். அவர் விடுத்துள்ள பிரியாவிடைச் செய்தியிலேயே மேற்கண்டவாறு குறிப்பிட்டுள்ளார்.

அவர் இதுதொடர்பாக மேலும் தெரிவித்துள்ளதாவது:-

"2022ஆம் ஆண்டு 'அரகலய' காலப் பகுதியில் இராணுவத் துப்பாக்கிச் சூட்டில் பொதுமக்கள் உயிரிழப்பைத் தவிர்க்க விரும்பினேன். ஆனால் எனது உத்தியை ஆட்சியாளர்கள் தவறாகப் புரிந்து கொண்டனர். அது என்னை ஒரு பாதகமான நிலைக்குத் தள்ளியது. 2022ஆம் ஆண்டு மே மாதம் 31ஆம் திகதி, நான் ஓய்வு பெறுவதற்கு ஏழு மாதங்களே எஞ்சியிருந்தன. ஆனால் அரசதரப்பினர் என்னை உத்தியோகபூர்வமாக இராணுவத் தளபதி பதவியில் இருந்து பாதுகாப்புப் படைகளின் பிரதானியாக மாற்றினர்.

சில நாள்களின் பின்னர், ஜனாதிபதி கோத்தாபய ராஜபக்ச நாட்டை விட்டு வெளியேற வேண்டியிருந்தது. அந்த நேரத்தில் நான் அரசாங்கத்தின் அனுமதியுடன் பாதுகாப்புப் படைகளின் பிரதானியாக வெளிநாட்டில் தேசியப் பாதுகாப்பு மாநாட்டில் கலந்துகொண்டிருந்தேன்.

2022ஆம் ஆண்டு போராட்டம் ஒரு உள்நாட்டுக் கலவரம். போராட்டக்காரர்களைக் கட்டுப்படுத்த குறைந்தபட்ச இராணுவ பலத்தை மட்டுமே பயன்படுத்த வேண்டும் என்று நான் உத்தரவு பிறப்பித்தேன்.

நிராயுதபாணியான பொதுமக்களுக்கு எதிராக உத்தியோகபூர்வ அதிகாரத்தைப் பயன்படுத்தும் இரக்கமற்ற கொலைகாரனாக மாற எனக்கு விருப்பமில்லை. எனது நோக்கங்கள் மோசமானவை அல்லது தீயவை அல்ல, அதிகார வெறி கொண்ட ஆட்சியாளர்கள் கூறுவது போன்று நான் அரசைக் காட்டிக் கொடுக்க முற்படவில்லை. அப்படியென்றால் அப்போதைய பிரதமர் போராட்டகாரர்களிடம் சிக்கியபோது அவரைப் பத்திரமாக மீட்க நான் ஏன் 'எயார் மொபைல்' படைப்பிரிவை அனுப்ப வேண்டும்?.

2019 மற்றும் 2022 ஆம் ஆண்டுகளில் நாட்டை ஆட்சி செய்த முன்னாள் ஜனாதிபதிகள், எனது ஒழுக்கம் மற்றும் சட்டத்தை மதிக்கும் சேவையை அங்கீகரித்தே இலங்கையின் தேசியப் பாதுகாப்புக்கான பிரதி ஆலோசகராக நியமித்தனர்" - என்றார். (அ-எ-இ)

## நாமல்...

பேராயர் கர்தினால் மல்கம் ரஞ்சித்தின் பெயருக்குக் களங்கம் ஏற்படுத்தும் வகையில் சமூக ஊடகங்களில் பதிவேற்றப்பட்டுள்ள பதிவுகள் தொடர்பாக ஜனாதிபதி செயலகம் மற்றும் குற்றப் புலனாய்வுத் திணைக்களத்தில் மேற்கொள்ளப்பட்டிருந்த முறைப்பாடுகளின் அடிப்படையில் நாமல் குமார கைது செய்யப்பட்டிருந்தார்.

சமூக ஊடகப் பதிவுகள் தொடர்பாக வாக்குமூலம் வழங்குவதற்காக நேற்றுக் கொழும்பு குற்றத்தடுப்புப் பிரிவுக்கு அழைக்கப்பட்டிருந்த நாமல் குமார, வாக்குமூலம் வழங்கிய பின்னர் கைது செய்யப்பட்டிருந்தார். (அ-எ-இ)

## காணிகளை...

தில் தொல்லியல் சின்னங்கள் இல்லாத, தனியாருக்குச் சொந்தமான காணிகளையும், பிரதேசசபைக்குச் சொந்தமான காணிகளையும் கையகப்படுத்தும் தொல்லியல் திணைக்களத்தின் நடவடிக்கைகளுக்கு எதிர்ப்புத் தெரிவித்தே மக்கள் இந்தப் போராட்டத்தில் ஈடுபட்டனர். இந்தப் போராட்டத்தில் குச்சவெளி கிராம சங்கங்கள், பொதுமக்கள் மற்றும் அயல் கிராமங்களைச் சேர்ந்த மக்கள் எனப்பலர் கலந்து கொண்டனர்.

காணிகளைக் கையகப்படுத்துவதற்கான எந்த அறிவித்தலும் இன்றி தொல்லியல் திணைக்களம் இரவோடு இரவாக அறிவிப்புப் பலகைகளைக் காட்சிப்படுத்துகின்றது என்றும், அந்தக் காணிகளில் தொல்லியல் சின்னங்கள் இல்லாதபோதும் அவற்றைக் கையகப்படுத்த தொல்லியல் திணைக்களம் முயற்சிக்கின்றது எனவும் பொதுமக்கள் சுட்டிக்காட்டியுள்ளனர்.

1985ஆம் ஆண்டுக்கு முன்னர் கடைத்தொகுதிகளுடன் காணப்பட்ட பிரதேசசபைக்குச் சொந்தமான பகுதியையும், மற்றுமொரு இடத்தில் நெற்களஞ்சியமாகக் காணப்பட்ட பழைய கட்டடங்களுடன் கூடிய பகுதியையும் தொல்லியல் திணைக்களம் கையகப்படுத்த நடவடிக்கை எடுத்து வருகின்றது என்று குற்றஞ்சாட்டியுள்ள மக்கள், அதனால் தங்களது வாழ்வாதாரம் பாதிக்கப்படும் என்றும் சுட்டிக்காட்டியுள்ளனர்.

இது தொடர்பில் நடவடிக்கை எடுக்குமாறு குச்சவெளிப் பிரதேச செயலரிடமும், மாவட்டச் செயலர், கிழக்கு மாகாண ஆளுநர் ஆகியோரிடமும், அரச திணைக்களங்கள், அரசியல்வாதிகளிடமும் மனு கையளிக்கப்படவுள்ளது என்றும் போராட்டத்தில் ஈடுபட்ட மக்கள் தெரிவித்தனர்.

இது தொடர்பாகக் கருத்துத் தெரிவித்துள்ள குச்சவெளிப் பிரதேச செயலர், தொல்லியல் திணைக்களத்தின் திருகோணமலை மாவட்ட அதிகாரிகளுடன் கலந்துரையாடப்பட்டது. இது தொல்லியல் திணைக்களத்தின் பணிப்பாளர் நாயகத்தின் அதிகாரத்துக்குட்பட்டது என்று தெரிவித்த அதிகாரிகள், இதுதொடர்பில் கலந்தாலோசித்து தீர்வு பெற்றுத்தர முயற்சிக்கின்றோம் என்று குறிப்பிட்டனர்" என்று தெரிவித்துள்ளார். (அ-எ-இ)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தமிழரசுக்கட்சி சிதைந்தாலும் தன்முனைப்பில் சுமந்திரன்!

### அரசியல் ஆய்வாளர் சி.அ.யோதிலிங்கம் தெரிவிப்பு

யாழ்ப்பாணம், ஜன. 2

தமிழரசுக்கட்சி சிதைந்தாலும், அழிந்தாலும் பரவாயில்லை, கட்சி தனது கட்டுப்பாட்டில் இருக்க வேண்டும் என்பதே சுமந்திரனின் நிலைப்பாடு என அரசியல் ஆய்வாளரும் சட்டத்தரணியும், சமூக விஞ்ஞான ஆய்வு மைய இயக்குநருமான சி.அ.யோதிலிங்கம் தெரிவித்துள்ளார்.

அவர் மேலும் தெரிவித்துள்ளதாவது:-

வவுனியாவில் இடம்பெற்ற இலங்கைத் தமிழரசுக் கட்சியின் மத்திய செயற்குழுக் கூட்டத்தில் சீ.வி.கே.சிவஞானம் தலைவராக தெரிவுசெய்யப் பட்டுள்ளார்.

மாவை சேனாதிராசாவை மாற்றவேண்டும் என்றால், அல்லது அவர் பதவியிலிருந்து விலகியுள்ளாரெனில் ஏற்கனவே தெரிவு செய்யப் பட்ட தலைவராக சிறீதரன் இருக்கின்றார். அவரைத் தலைவராகத் தெரிவு செய்வதுதான் ஒரு அறநெறிக்கு உட்பட்டதாகும். அதைவிடுத்து அதைப்பற்றி எதுவுமே பேசாமல் சி.வி.கே.சிவஞானம் தெரிவு செய்யப்பட்டுள்ளார்.

அதற்கமைய மத்திய குழுவை தனது கட்டுப்பாட்டுக்குள் கொண்டுவந்து தனக்குச் சார்பான செயற்பாடுகளை முன்னெடுக்கின்ற நடவடிக்கைகளில் சுமந்திரன் மும்முரமாக இருக்கின்றமை தெளிவாகின்றது.

அதுமட்டுமின்றி சுமந்திரன் தரப்போடு முரண்பட்ட பலரும் கட்சியில் இருந்து நீக்கப்பட்டுள்ளனர். அதற்கான தீர்மானமும் மேற்கொள்ளப்பட்டுள்ளது.

எனவே சுமந்திரனின் இந்த தன்முனைப்புச் செயற்பாடுகளால் ஒரு குறுகிய காலத்திலேயே இலங்கைத் தமிழரசுக் கட்சி வடக்கிலே இருந்த இடம் தெரியாமல் அழிந்து போகக்கூடிய சூழல் வரலாம் - என்றார். (ச-27)

## விரிவுரையாளர்கள் வெற்றிடம் நிரப்பல்

கொழும்பு, ஜன.2

பல்கலைக்கழகங்களுக்கு புதிய விரிவுரையாளர்களை இணைத்துக்கொள்ள பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுவுக்கு அனுமதி வழங்கப்பட்டுள்ளது.

பிரதமர் ஹரிணி அமரசூரியவுடன் கலந்துரையாடிய பின்னர் இதற்கு இணக்கம் தெரிவிக்கப்பட்டதாக அதன் தலைவர் பேராசிரியர் கபில செனவிரத்ன தெரிவித்தார். தற்போது வெற்றிடமாகவுள்ள விரிவுரையாளர்களில் 50 வீதமானவர்களை சேவையில் இணைத்துக் கொள்வதற்கு இதன் போது இணக்கம் தெரிவிக்கப்பட்டுள்ளது. (ச-இ)

**IELTS** - 04.01.2025 New Batch ஆரம்பம்
(Academic - General and Life Skill A1)
இத்துடன் Basic & Advance
English Grammar Classes
இல. 53, சிவகுருநாதர் வீதி
Brown Rd, Jaffna.
By : B.MURALI - 077 798 9830
(CS 29862) L-1

## மரண அறிவித்தல்

வெளிப்படுத்தல் 14.13 கர்த்தருக்குள் மரிக்கிறவர்கள் இதுமுதல் பாக்கியவான்கள்

மண்ணில் 02 . 10 . 1953



விண்ணில் 01 . 01 . 2025

### கனகலிங்கம் புகனேஸ்வரி

கோண்டாவில் கிழக்கை பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட கனகலிங்கம் புகனேஸ்வரி அவர்கள் நேற்று (01.01.2025) புதன்கிழமை கர்த்தருக்குள் நித்திரை அடைந்தார்.

அன்னார் காலஞ்சென்ற பரமு கனகலிங்கம் அவர்களின் பாசமிகு மனைவியும் நிசாந்த தென்னக்கோன் சாமினி (முகாமைத்துவ சேவை உத்தியோகத்தர். பிரதேச செயலகம் கோப்பாய்). மதன்ராஜ் (கண்ணன் டோகா கட்டார்). அபிமன் ராஜ்றோகினி. போதகர் ராஜா (அசெம்பிளி ஒவ் கோட் கோண்டாவில்) அவர்களின் அன்புத் தாயாரும். நிசாந்த தென்னக்கோண். அபிமன் (பேராசிரியர் இரசாயனவிய ற்றுறை பல்கலைக்கழகம் யாழ்ப்பாணம்). சியா (டோகா கட்டார்). கிருஸ்ணவேணி (ஆசிரியர் யா/முருமூர்த்தி மகா வித்தியாலயம் உடுவில்). ஆகியோரின் அன்பு மாமியாரும் கிறிஸ்ரின் ஜோய். கிறிஸ்ரின் அபிஷா எல்கே. ஹெஷிஜா நற்றலி. அனஸ்ரிகா. ஒகஸ்ரின். கிறிஸ்ரி ஆகியோரின் அன்புப் பேர்த்தியாரும் ஆவார்.

அன்னாரின் பூதவுடல் நல்லடக்க ஆராதனைக்காக அன்னாரின் இல்லத்திலிருந்து 3:00 மணிக்கு அசெம்பிளி ஒவ் கோட் கோண்டாவிலுக்கு எடுத்துச்செல்லப்பட்டு அங்கு ஆராதனை இடம்பெற்று இன்று (02.01.2025) வியாழக்கிழமை பி.ப. 4:00 மணிக்கு நல்லடக்கத்திற்காக கொட்டைக்காடு பொது மயானத்திற்கு எடுத்துச்செல்லப்படும்.

இவ் அறிவித்தலை உற்றார். உறவினர். நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளுமாறு கேட்டுக் கொள்கின்றோம்.

தகவல்: குடும்பத்தினர்.
077 729 9991

(CS 29565) V-1

## மரண அறிவித்தல்

### மகேஸ்வரன் இராசாத்தி



யாழ். கொக்குவிலைப் பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட மகேஸ்வரன் இராசாத்தி அவர்கள் நேற்று (01.01.2025) புதன்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான பரராசசிங்கம்-ரத்தினபூபதி தம்பதியரின் அன்பு மகளும் காலஞ்சென்றவர்களான பொன்னுத்துரை-இரத்தினம் தம்பதியரின் அன்பு மருமகளும் காலஞ்சென்ற மகேஸ்வரனின் அன்பு மனைவியும், ரஜனி (பிரான்ஸ்), ரயிதா, திலீஸ்குமார், பிரியதர்சினி, உமாநந்தினி ஆகியோரின் பாசமிகு தாயாரும் சத்தியரூபன், காலஞ்சென்ற யோகோஸ்வரன் மற்றும் சோபனா, பிரபாகரன், சுதர்சன் ஆகியோரின் அன்பு மாமியாரும் காலஞ்சென்ற சத்தியபாமா மற்றும் குணபாலசிங்கம், பத்மினிதேவி, விஜயலட்சுமி, உதயலட்சுமி ஆகியோரின் பாசமிகு சகோதரியும் சரவணபவன், குருநாதன், பரமேஸ்வரன் ஆகியோரின் பாசமிகு மைத்துனியும் துவாரகன், சுஜன், தர்சிகா, நிந்துஜா, தனுசியா, பிரணவன், கபில்ராஜ், கம்சாயினி, கர்வின், கனிமொழி, கலைப்பிரியா, கஸ்மிதா, பவிசன், சிவபாலன் ஆகியோரின் பாசமிகு பேர்த்தியும் ஆவார்

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (02.01.2025) வியாழக்கிழமை முற்பகல் 10.00 மணியளவில் அவரது இல்லத்தில் நடைபெற்று புதவுடல் தாவடி சேமக்காலையில் நல்லடக்கம் செய்யப்படும். இவ் அறிவித்தலை உற்றார், உறவினர்கள், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளுமாறு கேட்டுக்கொள்கின்றோம்.

தோற்றம் 28.02.1951 மறைவு 01.01.2025

தொடர்புகளுக்கு :-
33 753 822896 (பேரன்)
+94 75 926 9425 (மகள்)
+94 77 408 1517 (மருமகன்)

தகவல்: குடும்பத்தினர்

(CS 29564) P-1

செய்தி : 021 493 0000 - விளம்பரம் : 021-493 1111 செய்தி : news@uthayan.com விளம்பரம்:advt@uthayan.com
இப்பத்திரிகை, நியூ உதயன் பப்ளிக்கேசன் (பிறைவேற்) லிமிட்டெட் நிறுவனத்தினரால் [illegible] இலக்கத்தில் உள்ள அவர்களது பணிமனையில் 02.01.2025 இல் அச்சிட்டு வெளியிடப்பெற்றது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org